Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 24 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :212 ஆனி 14ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 28 ஜூன் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

கனடாவில் சேகரித்த

## ரூ.20 கோடிக்கு என்ன நடந்தது?

தமிழ் அரசு மகளிர் அணிச் செயலர் கேள்வி

விரிவு. பக்.02

# வடக்கில் இராணுவம் தொடர்ந்தும் இருக்கும்!

கூட்டமைப்பு கூச்சலிட்டாலும் ஒரு முகாம்கூட அங்கிருந்து அகலாது என்கிறார் இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கில் படையினரின் ஒரு முகாமைக்கூட அகற்றவும் மாட்டோம், குறைக்கவும் மாட்டோம். இராணுவத்தினர் அங்கு தொடர்ந்து நிலைகொள்வார்கள். இவ்வாறு திட்ட வட்ட மாகத் தெரிவித்தார் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா. 21 ▶



## எனக்கு எதிராக விசமப் பரப்புரை

பொருமுகிறார் லிங்கநாதன்

வவுனியா, ஜுன் 28

விசமப் பரப்புரையில் ஈடுபட்டுள்ள சில்லறைக் குழப்பவாதிகளின் செயல்களை வன்மையாகக் கண்டிப்பதாக வன்னித் தேர் 17 ▶

## முகக்கவசம் அணியாதோருக்கு தண்டம் அறவீடு

வவுனியா, ஜுன் 28

வவுனியாவில் முகக் கவசம் அணியாது பயணிப்பவர்களுக்கு தண்டம் விதிக்கும் நடவடிக்கை 17 ▶

## வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி முடிவு

கொழும்பு, ஜுன் 28

பொதுத்தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் இன்றுடன் முடிவடையும் என்று அரச அச்சக திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

பொதுத்தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்களை அச்சிடும் பணி முடிவுக் கட்டத்தை நெருங்கி விட் 21 ▶

## தொடரும் இராணுவ சுற்றிவளைப்புக்கள்

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணம் கோண்டாவில் பிரதேசம் நேற்று இரவு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சோதனைக்கு உள்ளாக்கப்பட்டது.

கோண்டாவில் வடக்கு அன்னங்கை பகுதியில் குவிக்கப்பட்ட ஏராளமான இராணுவத்தினர், கிராமத்தில் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். கிரா 17 ▶

## வடக்கில் இராணுவப் பிரசன்னம் கூட்டமைப்பின் உசுப்பேத்தல் கதை

இப்படிச் சொல்கிறார் தவராசா

யாழ்ப்பாணம், ஜுன் 28

வடக்கில் 20 ஆயிரம் உளவாளிகள் களமிறக்கப்பட்டுள்ளார்கள் என்பதும், மோசமான இராணுவ ஆட்சி ஏற்படப்போகின்றது என்பதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் தமிழ் மக்களை உசுப்பேத்துவதற்கு கூறும் கதைகள் 21 ▶

## ஓர் ஆசனம்கூடப் பெற வக்கில்லாதவர்கள் கூட்டமைப்பை விமர்சிப்பது வெட்கக் கேடு

*மாற்று அணிகளுக்கு சம்பந்தன் சாட்டையடி*



யாழ்ப்பாணம், ஜுன் 28

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தாயகத்தில் ஓர் ஆசனம்கூடப் பெற வக்கில்லாத மாற்று அணிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பது வெட்கக் கேடானது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 21 ▶

## முகக்கவசமில்லையேல் சுய தனிமைப்படுத்தலே!

இன்றிலிருந்து நடைமுறை

கொழும்பு, ஜுன் 28

முகக் கவசங்கள் அணியாதவர்களை 14 நாள்களுக்கு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதி பொலிஸ் மா அதியர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். 17 ▶

யாழ். பல்கலைக்கழக

## துணைவேந்தர் தெரிவுக்கு ஓக.7 பேரவை கூடுகிறது?

யாழ்ப்பாணம், ஜுன் 28

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தெரிவு நாடாளுமன்றத் தேர்தல் முடிந்ததும், எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி இடம் 21 ▶

## பொய்யுரைக்கும் கூட்டமைப்பை உடனே சிறைவைக்க வேண்டும்

மாவையின் உரைக்கு எதிராக மஹிந்த அணி போர்க்கொடி

கொழும்பு, ஜுன் 28

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைச் சுருட்டுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மீதும் அரசு மீதும் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொய்யான செய்திகளைத் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் உடன் திருந்தாவிடின் அவர்கள் அனைவரையும் கைதுசெய்து சிறையில் அடைப்பதே சிறந்தது. இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்துள்ளது மஹிந்த அணி.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தமிழர் தாயகத்தில் 20 ஆயிரம் உளவாளிகளை நடமாட விட்டுள்ளார் எனத் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை 21 ▶

## ஆவா குழுத்தலைவன் நேற்று மாலை கைது!

கொழும்பு உத்தரவால் அதிரடி

யாழ்ப்பாணம், ஜுன் 28

ஆவாக் குழுவின் தலைவர் என்று பொலிஸாரால் கூறப்படும் விநோதன் என்ற இளைஞன் சிறப்பு அதிரடிப் படையினரால் 17 ▶

## பொலிஸார் தாக்கியதாக வேட்பாளர் முறைப்பாடு

முல்லைத்தீவில் சம்பவம்

முல்லைத்தீவு, ஜுன் 28

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் அரசியல் கட்சி ஒன்றின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தன்னைத் தாக்கி மிரட்டியதாகத் 21 ▶

## அடித்தால் அடிப்போம்

தங்கள் கூட்டணியின் தனி சிறப்பியல்பு என்கிறார் விக்கி

யாழ்ப்பாணம், ஜுன் 28

நாங்கள் எமது எதிரிகளை விமர்சனம் செய்வதிலும் பார்க்க எமது கொள்கைகளையும் நாம் செய்யவிருக்கும் நடவடிக்கைகளையும் மக்களுக்கு எடுத்துரைப்பதிலேயே கண்ணும் 17 ▶

## ஆனையிறவுப் போரை நான் வழிநடத்தவில்லை

கருணா அம்மான் இப்படிக் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜுன் 28

ஆனையிறவுப் போரில் நான் கலந்து கொள்ளவில்லை. பானுதான் அந்தப் போரை வழிநடத்தினார் என்று 17 ▶

அவசர பணத்தேவைகளுக்கு செலான் வங்கியில் தங்கத் தீர்வு

அதிகபட்ச முற்பணத் தொகை

ரூ 57,000/-

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

011 200 88 88

செலான் வங்கி



## விபத்திலிருந்து தப்ப முயன்று பாலத்துக்குள் வீழ்ந்த பஸ்

வவுனியா, ஜுன் 28

வவுனியா - ஓமந்தை பகுதியில் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற விபத்தில் 18 பேர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற சொகுசுப் பேருந்து ஓமந்தைப் பகுதியில், எதிரே வந்த கனரக வாகனமொன்றுடன் நேருக்கு நேர் மோதி, விபத்துக்குள்ளாகும் நிலை ஏற்பட்டது. அந்த விபத்தைத் தவிர்க்க சாரதி முயன்ற போது பேருந்து கட்டுப்பாட்டை இழந்தது. இதனையடுத்து தறிகெட்டு ஓடிய பேருந்து வீதிக்கரையில் இருந்த பாலத்துக்குள் வீழ்ந்து விபத்துக் குள்ளானது. இதன்போதே 18 பேர் காயமடைந்தனர். அவர்கள் அனைவரும் உடனடியாக வவுனியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் சிலரது நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ.ம,110)

### கனடாவில் சேகரித்த

# ரூ.20 கோடிக்கு என்ன நடந்தது?

### தமிழ் அரசு மகளிர் அணிச் செயலர் கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 28

**நுண்நிதிக் கடனால் இடம்பெறும் தற்கொலைகள் மற்றும் வறுமைக்குள் வாடும் பெண் தலைமைக் குடும்பங்களின் மேம்பாட்டுக்காக கனடாவில் பல அமைப்புக்கள், நலன்விரும்பிகளால் சேகரிக்கப்பட்ட 20 லட்சம் ரூபா நிதி தமிழ் அரசுக் கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடாகக் கொண்டுவரப்பட்டது. அந்த நிதிக்கு என்ன நடந்தது? இவ்வாறு தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணிச் செயலர் திருமதி விமலேஸ்வரி சிறிக்காந்தறூபன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் போரால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக வடக்கு கிழக்கில் நுண் நிதிக் கடன் பிரச்சினைகளால் பலர் குடும்பத்தோடு தற்கொலை செய்த சம்பவங்கள் இடம்பெற்றன. பலர் குடும்பங்களோடு தலைமறைவு வாழ்க்கை நடத்துமளவுக்குத் தள்ளப்பட்டனர். இவர்களை கடன் சுமையிலிருந்து மீட்கவும் சுய வருமானத்தை கட்டியெழுப்பி அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கோடும் கனடாவிலுள்ள புலம் பெயர் அமைப்புக்களும் புலம்பெயர் தமிழர்களும் இணைந்து தமிழ் அரசுக் கட்சியூடாக 21 கோடியே 20 இலட்சம் (212 மில்லியன்) ரூபாவை வழங்கியிருந்தனர்.

இந்த நிதி வழங்கப்பட்டமை தொடர்பில் திருகோணமலையில் இடம்பெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணிக் கூட்டத்தில் குகதாசனால் வெளிப்படுத்தப்பட்டது. இருப்பினும் இந்த நிதிப் பயன்பாடு குறித்து இன்றுவரை எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. தமிழ் அரசுக் கட்சியின் மையச் செயற்குழுக் கூட்டத்தில் பொருளாளர் கனகசபாபதியால் இது குறித்து கேள்வி எழுப்பப்பட்டதுடன் தமிழ் அரசுக் கட்சியின் வங்கிக் கணக்கு கூற்றுக்களில் குறித்த நிதி வரவு வைக்கப்படவில்லை என்றும் தெரிவித்திருந்தார்.

நானும் இது தொடர்பாகக் கேள்வி எழுப்பியதன் பின்னர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தானே அந்த நிதியைகனடாவிலிருந்துபெற்றுவந்தேன்என்று தெரிவித்திருந்தார். ஆனால் இந்த 212 மில்லியன் ரூபாவுக்கு என்ன நடந்தது என்பது குறித்து இன்றுவரை எந்த உத்தியோகபூர்வத்தகவல்களும்வெளிப்படுத்தப்படவில்லை. நுண்நிதிகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கோ பெண்தலைமைத்துவக் குடும்பங்களுக்கோ இதுவரை எந்த உதவிகளும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறாயின் நிதி எங்கே? அந்த நிதியை யார் கையாண்டார்கள்? அந்த நிதி மோசடி செய்யப்பட்டுவிட்டதா? போன்ற சந்தேகங்கள் எழுகின்றன. இந்த நிதிக்கு என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை செய்வதற்கு அழுத்தம் கொடுப்போம். நிச்சயமாக இது வெளிப்படுத்தப்படும், என்றார். (ஒ.எ.20)

# காட்டிக் கொடுப்பவர்களின் கூடாரம்தான் கூட்டமைப்பாம்!

### சொல்பவர் கருணா அம்மான்

போராட்ட காலத்தில் எங்களைக் காட்டிக் கொடுத்த கும்பல்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கின்றது. அவர்களின் குருதி இன்னும் மாறவில்லை. இன்று எனக்கு ஒரு பிரச்சினை வரும்போது அவர்களின் காட்டிக்கொடுக்கும் எண்ணம் வெளிப்பட்டு வருகின்றது. இவ்வாறு கருணா அம்மான் என்று அறியப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தின்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் இருதரப்புக்கும் கூடுதலான இழப்புகள் இருந்தது என்பது உண்மையானது.

அரசியல் மேடைகளில் பரப்புரைகளுக்காக எதையும் பேசலாம் என்ற சுதந்திரம் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதனை நாங்கள் ஒரு அரசியல் பேச்சாகத்தான் தெளிவாக்கினோம். தற்போது அரசியலுக்காக திரிவடைந்துள்ள ஒரு பரப்புரையாகத்தான் எனக்கெதிராக அண்மைக்காலமாக பலர் தெரிவிக்கின்ற கூவல்களைப் பார்க்கின்றேன். தமிழர் தரப்பில் இதனைப் பெரிதாக எடுத்துக் கூறியிருந்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே. தமிழனுக்கு ஒரு பிரச்சினை என்று வரும் போது காப்பாற்ற முற்படாமல் காட்டிக் கொடுக்கும் கும்பலாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்றமடைந்துள்ளது. குறிப்பாக கோடீஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சிவாஜிலிங்கம் போன்றவர்கள்தான் கொக்கரித்துக் கொண்டிருந்தார்கள்.

தமிழர்களுக்கான தீர்வு தனித் தமிழீழம்தான் என்று விடுதலைப் புலிகளின் மேடையில் நின்று பேசிய பேச்சுக்கள் என்னிடம் இருக்கின்றன. மனோ கணேசன் வவுனியாவில் வைத்துப் பேசிய பேச்சு, சம்பந்தன் ஐயா பொங்கு தமிழ் முதல் மேடையில் பேசிய பேச்சு ஆகியவை என்னிடம் உள்ளன. இவற்றையெல்லாம் நான் கொடுத்தால் இன்று அவர்களை நேரடியாகக் கைது செய்வார்கள், என்றார். (ஒ,5)

## வலுவான பொருளாதாரத்துக்கு மூன்றிலிரண்டு அவசியமாம்!!!

அநுராதபுரம், ஜுன் 28

நாட்டில் ஒரு வலுவான பொருளாதாரத்தை உறுதி செய்வதற்காக சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை அவசியம் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்ற பரப்புரைக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எதிர்காலத்துக்காக புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துவது உள்ளிட்ட பல விடயங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்.

நாங்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை நாடுகின்றோம், எதிர்க்கட்சியை துஷ்பிரயோகம் செய்யவோ, அல்லது அவர்களைப் பார்த்து சிரிக்கவோ அல்ல. நாட்டுக்குள் தேவையற்ற சட்டங்களை நீக்கி, புதிய சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை உலகின் பிற நாடுகளுக்கு முன்னர் மீண்டும் உருவாக்குவதே எங்களின் குறிக்கோள் - என்றார். (ஒ,5)

### வீடு அழியும் நிலையில்

## பிரிந்து சென்றவர்களை அழைப்பது நகைச்சுவை!

### இப்படிச் சொல்கிறார் அருந்தவபாலன்

யாழ்ப்பாணம், ஜுன் 28

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வீடு புற்றெடுத்து, விச நாகங்கள் சூழ்ந்து, அழிந்து போகின்ற நிலையில் இருக்கும்போது, பிரிந்து சென்றவர்களை வீட்டுக்குள் அழைப்பது நகைச்சுவையானது என்று, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் க.அருந்தவபாலன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் உள்ள தனது அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் அரசுக் கட்சியின் வீடு புற்றெடுத்து, விச நாகங்கள் சூழ்ந்து, அழிந்து போகின்ற நிலையில் இருக்கும் போது, பிரிந்து சென்றவர்களை வீட்டுக்குள் அழைப்பது நகைச்சுவையானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் காலத்தில் பல ஏமாற்றுக் கதைகளை கூறுவது தெரியும். ஒரு வகையில் அந்த வீட்டுக்குள் அவர்களுடன் நெருக்கமாக பழகியவன் என்ற அடிப்படையில் எனக்கு அது கூடுதலாகவே தெரியும்.

இதுகூட ஒரு தேர்தல் கால குண்டுதான். அடிக்கடி மாவை.சேனாதிராசா குண்டுகள் போடுவார். அந்த வகையான தேர்தல் குண்டாகவே இதனைக் கருதுகின்றோம்.

இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மக்கள் வெறுக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அதற்கு ஆதரவளித்த மக்கள் பெரும்பாலும் அதிலிருந்து வெளியேறி மாற்று அணியாக விக்னேஸ்வரன் அணியைத் தெரிவு செய்து எங்களுக்கு ஆதரவைத் தந்து ஆதரவைப் பெருகிக் கொண்டிருக்கிறது.

இந்தத் தேர்தலுடன் அவர்கள் மக்களுடைய அரசியலில் இருந்து அகற்றப்படுவார்கள் - என்றார். (ஒ,5,20)

# தமிழ்க் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் விவரம்

கொழும்பு, ஜூன் 28

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக தேசியப் பட்டியல் நியமனத்துக்காக வழங்கப்பட்ட பட்டியலில் இடம்பெற்றவர்களின் பெயர் விவரம் வெளியாகியுள்ளது.

அம்பிகா சற்குணராசா- சட்டத்தரணி, யாழ்ப்பாணம்.
கதிர்காமர் வேலாயுதபிள்ளை தவராசா ஜனாதிபதி சட்டத்தரணி, தமிழ் அரசுக் கட்சி கொழும்பு கிளைத் தலைவர்.
தம்பிராசா குருகுலராசா- முன்னாள் வடமாகாணசபை அமைச்சர், கிளிநொச்சி.
சுசிலிப்பிள்ளை சேவியர் குலநாயகம் இலங்கை தமிழ் அரசுக் கட்சி நிர்வாக செயலாளர், யாழ்ப்பாணம்.
கிருஷ்ணபிள்ளை சேயோன்- இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வாலிபர் அணிதலைவர் மட்டக்களப்பு.
மாதினி நெல்சன்- மகளிர் அணி தலைவி, தமிழ் அரசுக் கட்சி யாழ்ப்பாணம்.
குலசேகரம் மகேந்திரன்- தமிழீழ விடுதலை இயக்க உபதலைவர் கல்முனை, அம்பாறை.
அன்னம்மா சௌந்தரராசா- நற்பட்டிமுனை, அம்பாறை.
தம்பிஜயா மகாசிவம் -முன்னாள் தமிழ் ஆசியர் சங்க பொதுச் செயலாளர், யாழ்ப்பாணம்.
ஆறுமுகம் நடேசு இராஜரெட்ணம்- முன்னாள் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர், யாழ்ப்பாணம்.
பொன்னம்பலம் செல்வராசா -மூத்த தலைவர் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, மட்டக்களப்பு.
கந்தையா தேவராசா- வன்னி

ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் 29, தேசியப் பட்டியல் உறுப்பினர்களின் பெயர்களை தேர்தல் ஆணைகுழுவுக்கு அனுப்ப முடியும். எனினும் இந்தப் பட்டியலில் உள்ளவர்கள் மட்டுமே தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட வேண்டும் என்ற விதி இல்லை. தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யாதவர்களையும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் விரும்பினால் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

புத்தூரில் வாள்வெட்டு

## 10 பேர் கொண்ட கும்பல் அட்டகாசம்

வாள்கள் மற்றும் கொட்டன்களுடன் வீடொன்றுக்குள் புகுந்தவர்கள் அங்கிருந்த ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தினர். வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் இரண்டு மற்றும் சமையல் பாத்திரங்களையும் சேதமாக்கி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு யாழ்ப்பாணம், புத்தூர் கிழக்கில் நடந்துள்ளது.

வீட்டின் உரிமையாளரான மணியம் விஜயன் (வயது -56) என்பவர் கை, கால், தோள் ஆகிய பகுதிகளில் வெட்டப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தலைக்கவசம், மற்றும் முகமூடிகளை அணிந்தவாறு சுமார் 10 பேர் கொண்ட குழுவினர் வீட்டுக்குள் புகுந்துள்ளனர். வாள்கள், கொட்டன்களுடன் ஆள்கள் வருவதை அவதானித்த வீட்டின் உரிமையாளரின் மகன் அங்கிருந்து தப்பித்துச் சென்ற நிலையில் அவரது தந்தை மீது வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

காயமடைந்தவரின் மகன் இது தொடர்பில் தெரிவித்ததாவது

விளையாட்டின்போது ஏற்பட்ட ஒரு பிரச்சினையைத் தொடர்ந்தே வாள்வெட்டு இடம்பெற்றுள்ளது. எனது தந்தையார் இலக்கு அல்ல. நான்தான் அவர்களின் இலக்கு என்று நினைக்கிறேன். இரண்டு முறை இவ்வாறு வீட்டுக்கு வந்தார்கள். நாங்கள் தப்பித்துச் சென்றோம். அன்றும் அவர்கள் வந்ததை அவதானித்ததாலேயே நான் தப்பித்தேன். அதனால் ஆத்திரமடைந்த அவர்கள் தந்தையை வெட்டிவிட்டுச் சென்றுள்ளனர், என்றார்.

சம்பவம் தொடர்பில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.ப.26)



## ஆயரின் சிலை திறப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ். மறை மாவட்டத்தின் முதலாவது ஆயர் பெட்டாச்சினின் சிலை, யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மறை மாவட்டத்தின் முதல் ஆயரின் வடிவமைக்கப்பட்ட உருவச் சிலையை யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் திறந்து வைத்தார். சிலையை வடிவமைத்த சிற்பக் கலைஞர்கள் இருவர், யாழ். மறை மாவட்ட ஆயரால் கௌரவிக்கப்பட்டனர். (ஒ.5)

## கோத்தாதான் தீர்வை வழங்க வேண்டும்!!!

*கூறுகிறார் விஜயகலா*

போரை முடிவுக்கு கொண்டு வந்த இந்த ஜனாதிபதியே விரும்பியோ விரும்பாமலோ மக்களுக்குத் தீர்வை வழங்க வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றின்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை முடிவுக்கு கொண்டு வந்தவர்கள் ஆட்சிக்கு வந்துள்ளார்கள். எங்களுடைய குறுகிய ஆட்சிக் காலத்தில் ஜனநாயகத்தை தேடிக்கொடுத்துள்ளோம். இன்றைய ஜனாதிபதிதான் போரின் போது பாதுகாப்புச் செயலாக இருந்துள்ளார். காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைச் சொல்ல வேண்டிய பொறுப்பு உண்டு.

அரசில் இருப்பவர்களை ஒதுக்கவேண்டும். இன்று உள்ள ஆயுதக் குழுக்கள்தான் அரசுடன் இருந்து போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள். அவர்கள் காட்டிக் கொடுத்தமையால் தான் போரை முடிவுக்கு கொண்டு வந்திருக்கின்றார்கள். ஆகவே அவர்களை நாங்கள் நிராகரிக்க வேண்டும், என்றார். (ஒ.5.35)

## தேர்தல் ஆணைக்குழு பக்கச்சார்பு என குமுறுகின்றார் விமல் வீரவன்ச

தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்த் தரப்பினருக்கு நன்மை பயக்கும் விதத்தில் தேர்தல் தொடர்பான நிபந்தனைகளை விதிக்கிறது. ஆணைக்குழு ஒரு தலைப்பட்சமாக செயற்படுகிறது. விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளால் வேட்பாளர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். இவ்வாறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அநுராதபுரம் தம்புத்தேகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

வேட்பாளர்கள் தங்களின் காரியாலயத்தில் கூட போட்டியிடும் இலக்கம், சின்னம் மற்றும் உருவப் படங்கள் ஆகியவற்றைக் காட்சிப்படுத்தக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளது. இதனால் ஏற்படும் பாதிப்பு என்ன என்பதை ஆணைக்குழு தெளிவுப்படுத்த வேண்டும்.

தேர்தல் ஆணைக்குழு எதிர்த் தரப்பினருக்கு ஆதரவாகவே செயற்படுகிறது. விதிக்கப்படும் நிபந்தனைகளால் எதிர் தரப்பினர் நன்மையடைகிறார்கள். கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு வேட்பாளர்களின் உரிமைகளை பறிக்கக்கூடாது. பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் இன்னும் மக்கள் மத்தியில் சென்றடையவில்லை.

அனைத்து வேட்பாளர்களும் ஊடகங்களின் வாயிலாக தேர்தல் பரப்புரைகளை முன்னெடுக்க முடியாத பொருளாதார நெருக்கடி நிலை தற்போது காணப்படுகிறது. தேர்தல் ஆணைக்குழு வேட்பாளர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் செயற்பாடுகளை வகுக்க வேண்டும், என்றார். (ஒ.எ)

## வெற்றிலைக்கேணிக் கடலில் படகு வெடித்து மூழ்கியது

*மயிரிழையில் தப்பிய மீனவர்கள்*

இரவு முழுவதும் மீன்பிடியில் ஈடுபட்டு காலை கரைதிரும்ப முயன்ற மீனவர்களது படகு, கடலில் வெடித்ததால் நீரில் மூழ்கியது. படகில் இருந்த மீனவர்கள் கரைதிரும்ப முடியாது உயிருக்குப் போராடி நீண்ட நேரத்தின் பின்னர் கரைதிரும்பினர். இந்தச் சம்பவம் வடமராட்சிக் கிழக்கு வெற்றிலைக் கேணி கடலில் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

ஆழ்கடல் தொழிலுக்காக ஞானசேகரம் ரகு என்பவரது படகில் ஏரம்பு யோகராசா மற்றும் சஜாத் ஆகிய மூன்று தொழி லாளர்கள் கடலுக்குச் சென்றுள்ளனர். தொழிலுக்குச் சென்ற தொழி லாளர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு பெருமளவான மீன்களையும் பிடித்துக் கொண்டு நேற்றுக் காலை கரைதிரும்பிக் கொண்டிருந்தனர்.

அவர்களது படகில் திடீரென வெடிப்பு ஏற்பட்டுள்ளது. கரை திரும்ப முடியாது தத்தளித்த மீனவர்கள் இன்னொரு படகின் உதவியுடன் கரை திரும்பினர்.

'படகில் வெடிப்பு ஏற்பட்டதும், அதனையும் பொருட்படுத்தாது கரைக்கு வந்து விடுவோம் என வேகமாக படகை கரையை நோக்கிச் செலுத்தினோம். படகில் ஏற்பட்ட வெடிப்பு மெல்ல மெல்லப் பெரிதானது. ஒரு கட்டத்தில் படகுக்குள் கடல்நீர் புகுந்து மூழ்கும் நிலைமைக்கு வந்தது. அதனையடுத்து படகை நங்கூரமிட்டுவிட்டு படகின் வெளியிணைப்பு இயந்திரத்தை கழற்றி கயிற்றில் கட்டிக் கடலில் போட்டுவிட்டு, படகினுள் இருந்த மிதவைகளைக் கையில் எடுத்துக் கொண்டு கடலில் நீந்தத் தொடங்கினோம். நீண்ட நேரமாக கடலில் தத்தளித்து, தூரத்தில் நின்ற மற்றுமொரு படகில் தஞ்சமடைந்தோம். அதன் பின்னர் அந்தத் தொழிலாளர்களின் உதவியுடன் செல்போன் மூலம் தகவலை கரைக்குத் தெரியப்படுத்தி கரையிலிருந்து படகை வரவழைத்து அந்தப் படகில் கடலில் போட்ட வெளியிணைப்பு இயந்திரத்தையும் எடுத்துக் கொண்டு கரை சேர்ந்தோம்' என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ஒ.க.70)

## விதிமுறை மீறல் 9 சாரதிகளுக்கு

### ரூ. 3,02,500 தண்டம்

தென்மராட்சி, ஜூன் 28

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 9 பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை 3 லட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தது.

மது போதையில் வாகனம் செலுத்தினரென நால்வர், மது போதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தினரென மூவர், மதுபோதையில் வாகன வரிப் பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி சென்றமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

அவர்கள் ஒன்பது பேருக்கு எதிராகவும் சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

9 பேரும் குற்றத்தை ஏற்றுக் கொண்டனர். மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூவருக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மது போதையில் வாகன வரிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 27 ஆயிரத்து 500 ரூபாவும், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (த-9)

# பயிர்கள், தாவரங்களின் உற்பத்திக்கு உதவுங்கள்

## யாழ்.தென்னை செய்கைச் சபை புலம்பெயரிகளிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 28

புலம்பெயர் நாடுகளில் வாழும் நிதி வழங்கும் அன்பர்கள் இனி வரும் காலங்களில் இங்குள்ள மக்கள் கையேந்தும் நிலையைத் தவிர்த்து, நிவாரணம் வாங்கும் நிலையைத் தவிர்த்து எமது மாகாணங்களில் பயிரிடக்கூடிய பயிர்கள், தாவரங்களின் உற்பத்திக்கு உதவவேண்டும். குடிசைக் கைத்தொழில் மேற்கொள்வதற்கான உதவிகளை வழங்குவதன் மூலமும் மக்களுடைய பொருளாதாரத்தில் பங்களிப்புச்செய்ய முடியும்.

இவ்வாறு யாழ்ப்பாண தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊர்காவற்றுறை பிரதேசசெயலர் பிரிவில் ஜே/53 கிராம அலுவலர் பிரிவிலுள்ள கரம்பொன் கிழக்கு - 175, கரம்பொன் தென்கிழக்கு 50, கரம்பொன 30 மற்றும் பருத்தியடைப்பு 20 போன்ற கிராமங்களிலுள்ள தென்னைப்பயிர் செய்கையாளர்கள் மொத்தம் 275 பேருக்கு 550 உயர்தர தென்னை நாற்றுக்களை தென்னைப் பயிர்ச்செய்கை சபை கடந்த 23ஆம் திகதி வழங்கியுள்ளது. அவற்றை பயிரிடல் பற்றிய அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது

இது பற்றி அனுப்பிய செய்திக் குறிப்பில் வைகுந்தன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்தச் செயற்றிட்டம் புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் அன்ரன் விஜயகுமாரின் அன்பளிப்பாகும். தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் முகாமையின் கீழ் உதயதாரகை மாதர் சங்கமும் கரம்பொன் கற்பகதரு சங்கமும் இணைந்து தேசிய தமிழர் சக்தி அமைப்பின் அனுசரணையிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் மூலம் மக்களுடைய வாழ்வாதாரத்தை முன்னேற்றக்கூடியதாகவும் உணவுத்தேவையை பூர்த்திசெய்யக்கூடியதாகவும் அமைகின்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நிகழ்வில் உரையாற்றிய பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன். 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்தப் பகுதி தென்னை வளம்மிக்க



இடமாக காணப்பட்டதாகவும் தற்போது அரிதாக காணப்படுவதாகவும் இந்தப் பகுதி நிலம் கற்பாங்கானதாக காணப்படுவதனால் 3அடி நீளம் 3அடி அகலம் 3அடி ஆழமாக கிடங்கு வெட்டி அவற்றை நடுகைசெய்வதன் மூலமாக சிறந்த பயனைப் பெறலாம் என்று குறிப்பிட்டார்.

'சி.ஆர்.ஐ.சி. 65' வகை உயர்தர தென்னை நாற்று வகையைச் சேர்ந்தவையே வழங்கப்பட்டன. இவற்றை உரிய முறையில் பராமரித்தால் மூன்று வருடங்களில் பயன்தரும்.

இந்தப் பகுதியிலுள்ள தென்னைப் பயிர்ச்செய்கையாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தென்னைசார் மானியத்திட்டங்கள் வழங்கப்படும். 2025, 2030 ஆம் ஆண்டளவில் வடக்கு மாகாணம் தென்னைப் பயிர்ச்செய்கையில் தன்னிறவை அடைவதற்கு இந்தப் பகுதி மக்களும் ஆர்வம்காட்ட வேண்டும் என்று பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் கூறினார். (த)

### சரவணை அருள்வரதகாளிக்கு வருடாந்த உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

சரவணை மேற்கு இரண்டாம் வட்டாரத்திலுள்ள ஸ்ரீ அருள்வரத காளியம்பாள் வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, சுகாதார அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி மட்டுப்படுத்தப்பட்ட பக்த அடியார்களின் எண்ணிக்கையில் திருவிழா நடைபெறவுள்ளது. திருவிழா நாள்களில் தினமும் முற்பகல் 9 மணிக்கு அபிஷேக ஆராதனை பூஜை நடைபெறும் என்று கோவில் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (த)

## திருநெல்வேலி வைரவருக்கு ஆனி உத்தர திருமஞ்சனம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஞானவைரவப் பெருமான் கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆனி உத்தர திருமஞ்சனம் நடைபெற்று சுவாமி திருஉலாத் தரிசனம் நடைபெறும்.

'ஆனிஉத்தர திருமஞ்சனம்' எனும் விடயத்தில் ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனின் அருளுரை இடம்பெறவுள்ளது. (த)

## கரையோர வீதியில் ஒளிரத்தொடங்கின மின்குமிழ்கள்

தென்மராட்சி, ஜூன் 28

மறவன்புலவு மணல்காடு வீதி தொடக்கம் தனன்களப்பு வரையான கடலேரியை அண்மித்த வீதிகளில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தினர் வீதியில் மின் விளக்குகளைப் பொருத்தி ஒளிரவிட்டுள்ளனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியில் நாவற்குழி தொடக்கம் சங்குப்பிட்டி பாலம் வரை சாவகச்சேரி பிரதேச சபையினர் ஆறு வருடங்களுக்கு முன்னர் பொருத்தியிருந்த மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளன.

அவற்றைப் புதுப்பித்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருகின்ற நிலையில் காற்றாலை நிறுவனத்தினர் கடலேரியை அண்மித்த வீதிகளில் மின்விளக்குகள் பொருத்தியுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (த-9)

## தனியார் கல்வி நிலையங்களை பார்வையிடும் சுகாதாரப் பிரிவு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாண குடா நாட்டிலுள்ள தனியார் கல்வி நிலையங்களை சுகாதாரப் பிரிவினர் பார்வையிட்டு வருகின்றனர்.

தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் ஆரம்பிக்கவுள்ள நிலையில் அந்த நிலையங்களின் சுகாதார நடைமுறைகளை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

கல்வி நிலையங்களின் சுகாதாரம், தனியாள் இடைவெளி பேணல் போன்றவை முன்கூட்டியே பார்வையிடப்படவுள்ளன என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்தது.

தனியார் கல்வி நிலையங்களில் வகுப்பறைகளின் இருக்கைகள் தனியாள் இடைவெளிக்கு ஏற்றவகையில் ஒழுங்கு செய்யப்படவேண்டும். கல்வி நிலையங்கள் துப்புரவு செய்யப்பட்டு தொற்றுநீக்கி விசிறப்பட வேண்டும் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவை யாவும் உரிய சுகாதார ஒழுங்குக்கு அமைய செயற்படும் கல்வி நிலையங்களுக்கே அவற்றை மீள இயக்குவதற்கு அனுமதி வழங்கப்படும் என்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (த-17)

## தனியார் கல்வி நிலையங்களை அனுமதிபெற்று இயக்கமுடியும்

சாவகச்சேரி, ஜூன் 28

தென்மராட்சியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் அனுமதிபெற்று தனியாள் இடைவெளிகளைப் பேணியவாறு வகுப்புகளை நடத்தலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக பாடசாலைகள் அரசால் கடந்த மார்ச் மாதம் மூடப்பட்டபோது தனியார் கல்வி நிறுவனங்களும் இயங்கத் தடைவிதிக்கப்பட்டது.

நாளை திங்கட்கிழமை பாடசாலைகள் இயங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்தநிலையில் தனியார் கல்வி நிறுவனங்களும் உரிய சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி வகுப்புகளை நடத்தலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்கள் வகுப்புகளை ஆரம்பிப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நிறுவன வளாகம் துப்புரவு செய்யப்பட்டு கிருமித் தொற்றுநீக்கி விசிறிய பின்னர் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினரின் அனுமதிபெற்று வகுப்புகளை நடத்தலாம் என்று சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் அறிவித்துள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களை நடத்துவோர் நிறுவனத்திலுள்ள தளபாடங்களுக்கு ஏற்ப மாணவர்களை அனுமதித்து சுகாதாரத் திணைக்களத்தின் அனுமதி பெற்று வகுப்புகளை நடத்தலாம் என்றும் திணைக்களம் அறிவித்துள்ளது. (த-9)

## அரசமைப்பு பேரவையின் உறுப்பினர் பதவி விலகல்

கொழும்பு, ஜூன் 28

அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர் நிலையில் இருந்து பதவி விலகுவதாக பேராசிரியர் ஜயந்த தன பால கடிதம் மூலம் பேர வைக்கு அறிவித்துள்ளார். தமது முடிவுக்கு சுகவீனமே காரணம் என்று அவர் கடி தத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் முடிவை அரச மைப்பு பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வெற்றி டத்துக்கு ஜனாதிபதி கோத் தாபய ராஜபக்ச ஒருவரை நியமிப்பார் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (ஏ-ரி1)

## 821 கடற்படையினர் பூரண குணமடைவு

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் கொரோனாத் தொற் றுக்குள்ளான கடற்படை வீரர்களில் இதுவரை 821பேர் பூரணமாக குணமடைந்து வெளியேறியுள்ளனர் என்று கடற்படை பேச்சாளர் லெப் டினனட் கொமாண்டர் இசுரு சூரிய பண்டார தெரிவித்துள் ளார்.

நாட்டில் 904 கடற்படை வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது.

தற்போது 83 கடற்படை யினர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என் றும் கடற்படை பேச்சாளர் தெரிவித்தார். (ஏ-ரி2)

## நிதி முறைகேடுகள்: ஆராய ஆணைக்குழு

கொழும்பு, ஜூன் 28

கடன்கள் மற்றும் நிதி முறைகே டுகள் குறித்து ஆராய்வதற்காக ஆணைக்குழு ஒன்று அமைக் கப்படவுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித் துள்ளார். இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக் கையைத் தொடர்ந்து இந்த ஆணைக்குழு ஆரம்பிக்கப் பட்டது.

இலங்கை வங்கி ஊழியர் சங் கத்தினருக்கும், பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று அலரிமாளிகையில் இடம்பெற் றபோதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஏ-ரி1)

# சஜித்தின் பிரதமர் கனவும் கலையும்!



### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆருடம்

கொழும்பு, ஜூன் 28

**சஜித் பிரேமதாசவின் ஜனாதிபதிக் கனவு கலைந்ததுபோல் தேர்தலுக்குப் பின்னர் பிரதமர் கனவும் கலைந்துவிடும். ஒகஸ்ட் 6ஆம் திகதியாகும்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் இல்லாமற் போகும் நிலை ஏற்படும்.**


இவ்வாறு சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்க்கட்சி பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது. மக்கள் ஒருபோதும் இவர்களின் பொய்ப் பிர சாரங்களை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருந்த நிலையிலே இந்த அரசாங்கத்தை நாங்கள் பொறுப்பேற்றோம். வீழ்ச்சியுற்றிருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப கோத்தா பய ராஜபக்ச மற்றும் மஹிந்த ராஜபக்ச இணைப் பின் மூலம் மாத்திரமே முடியும். அதனால் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நாட்டின் பிரதமராகுவது மஹிந்த ராஜ பக்சவாகும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஆனால் தேர்தலில் சஜித் பிரேம தாஸ பிரதமராகுவார் எனச் சிலர் தெரிவித்து வருவதை நான் காண்கின்றேன்.

நாட்டில் ஜனாதிபதி ஒரு கட்சியிலும் பிரதமர் வேறு கட்சியிலும் இருந்ததன் மூலம் இந்த நாடு சீரழிந்ததை மக்கள் மறந்துவிடவில்லை. அவ்வாறான அரசாங்கம் ஒன்றை அமைக்க மக்கள் தயாரில்லை.

அதனால் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று நிலையான அரசாங்கம் ஒன்றை நாங்கள் அமைப்போம் அதன் மூலம் நல்லாட்சி அரசாங்கத்தால் சீர ழிந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெ ழுப்புவோம்- என்றார். (ப)



## ரொரன்ரோவில் தமிழ் பெண் மாயம்!

ரொரன்ரோ, ஜூன் 28

கனடாவில் வாழ்ந்து வந்த இலங்கைத் தமிழ் பெண் ஒரு வரை காணவில்லை என ரொரன்ரோ பொலிஸார் தமது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத் தில் பதிவு செய்துள்ளனர். சசிகுமாரி அமரசிங்கம் (வயது-47) எனும் பெண்ணே காணாமற் போயுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதி இரவு 10.30 மணிக்கு நாடாளு மன்ற வீதிப்பகுதியில் இறுதி யாக காணப்பட்டார் எனத் தெரியவந்துள்ளது. இந்த நபர் 4 அடி 5 அங்குலம் உயரம் கொண்டவர் எனவும் காணா மற் போன தினத்தன்று நீல நிறச் சட்டையும், ரோஸ் நிற நீளக்காற்சட்டையும் அணிந்தி ருந்தார் எனவும் தெரியவருகின் றது. இவர் தொடர்பில், யாருக் கேனும் தகவல் தெரிந்தால் உடனடியாக தங்களுக்கு தெரி யப்படுத்துமாறு ரொரன்ரோ பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஏ-ரி2)

## 19க்கு சமாதிகட்ட கருணா கங்கணம்

கொழும்பு, ஜூன் 28



பொதுத்தேர்தலின் பின்னர் அரசுடன் இணைந்து செயற்படுவேன். அரசமைப் பின் 19ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்பதே எனது நிலைப்பா டாகும் என்று கருணா அம் மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முர ளிதரன் தெரிவித்தார். தனியார் வானொலி யொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் கருணா அம்மான் மேலும் தெரி வித்ததாவது:

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டம் நீக்கப் பட்டால்தான் இந்த நாட்டின் தலைவரால் சிறப் பாக செயற்படமுடியும். ஆணைக்குழுக்களை வைத்துக்கொண்டு செயற்பட்டால் சிக்கல்கள் வரும். எனவேதான் இந்தச் சட்டம் கண்டிப்பாக இல்லாது செய்யப்படவேண்டும் என குறிப்பிடு கின்றேன்.

பொதுத்தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் அர சுடன் இணைந்தே செயற்படுவோம். இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால் ஒருபோ தும் வெற்றிபெறமுடியாது. அதேவேளை, எமது கட்சியை கடந்த நான்கரை வருடங்களில் பலப் படுத்தியுள்ளோம். வெற்றியோ தோல்வியோ எல்லா மாவட்டங்களிலும் போட்டியிடும் அள வுக்கு அது வளர்ச்சி கண்டுள்ளது.

மேலும் கட்சியை பலப்படுத்தவேண்டும். குடா நாடுவரை விஸ்தரிக்கவேண்டும். அடுத்த மாகா ணசபைத் தேர்தலில் கொழும்பிலும் போட்டியி டும் திட்டம் உள்ளது. கடந்த காலத்தை மறந்து முன்னோக்கி பயணிக்கவே முயற்சிக்கின்றோம்' -என்றார். (ம-44)

CHINMAYA MISSION

## யாழ்ப்பாணத்தில் இலங்கை சின்மயா மிஷன்

- காலத்தின் தேவை கருதி யுத்தம் முடிவிற்கு வந்ததுமே யாழ்ப்பாணத்தில் செயற்பாடு களை ஆரம்பித்த சின்மயா மிஷன் தொடர்ந்து இந்து மத சாஸ்திரங்கள் தரும் மெய்யறிவை மக்களுடன் பகிர்ந்து அவர்களது அகமாற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வருகிறது.
- **யாழ்ப்பாணத்தில் சின்யா மிஷனின் செயற்பாடுகளில் ஆரம்பத்திலிருந்து பெரும் பங்கு வகித்த சுவாமி சிதாகாஷானந்தா அவர்கள் சுதந்திரமாகச் செயற்படு வதற்காகச் சின்மயா மிஷனிலிருந்து சுயமாக விலக இவ்வருடம் மார்ச் மாதத்தில் முடிவெடுத்தும் தற்போது விலகிவிட்டார் என்பதை இத்தால் அறியத் தருகின்றோம். நாம் அவரது முடிவை மதிப்பதுடன் அவரிற்கு நம்முடைய வாழ்த் துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**
- **மேலும், யாழ்ப்பாணத்தில் சின்மயா மிஷனது பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஜூன் மாதத்திலிருந்து சுவாமி குணா தீதானந்தா அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் அறியத் தருகிறோம்.**
- கோவிட் - 19 காரணமாக ஏற்பட்ட எதிர்பாராததும் துரதிர்ஷ்டவசமானதுமான சூழ்நிலை நமது பணிகளைத் தடைகளின்றித் தொடர்வதில் தடங்கல்களை ஏற்படுத்தி யிருந்தாலும், அரசாங்கம் மக்களின் போக்குவரத்திற்கும் நடமாட்டத்திற்கும் விதித்தி ருக்கும் கட்டுப்பாடுகளைத் தளர்த்திவரும் இவ்வேளையில் யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் இந்து ஆன்மிக சாஸ்திரங்கள் தரும் அறிவைப் பரப்பும் சின்மயா மிஷனின் பணிகள் தொடர நம்மால் இயன்ற அனைத்தையும் செய்வோம் என்பதை யாழ்ப்பாணத்தில் உள்ள எமது அன்பர்களுக்கும் இந்து சமூகத்திற்கும் உறுதி அளிக்கின்றோம்.

*- இலங்கை சின்மயா மிஷன் நிர்வாகக் குழு -*

**இலங்கை சின்மயா மிஷன்**

(in.14808) (13.17)

| சின்மய ஞானவேல் | சின்மய பிரகதி | |
|---|---|---|
| 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். | 32, 10 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 3 | கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. |
| 021 222 3447 | 011 259 1344 | |

யாழ்.போதனா மருத்துவமனை உணவகத்தில்

# கறியுடன் பரிமாறப்பட்டது பொரித்த கரப்பான் பூச்சி

## முன்னைய வழக்கு 8ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பழங்களில் 'யூஸ்' தயாரித்து விற்பனைசெய்துவரும் சிற்றுண்டிச்சாலையில் சுகாதார சீர்கேடுகள் காரணமாக நடத்துநருக்கு எதிராக 15 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு 8 மாதங்களாக நிலுவையில் உள்ள நிலையில், அதே சிற்றுண்டிச்சாலையில், ஒருவருக்கு கடந்த 19ஆம் திகதி தோசையுடன் வழங்கப்பட்ட கறிக்குள் கரப்பான் பூச்சி பொரிந்த நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இது பற்றி, உணவுஉட்கொள்ள வந்த நபர், மருத்துவமனை பிரதிப் பணிப்பாளரிடம் எழுத்துமூலமாக முறைப்பாடு வழங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு 8 மாதங்களாக விசாரணையின்றி திகதியிடப்பட்டு வந்த நிலையில், கடந்த 24ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் நீதிமன்றில் சாட்சியம் வழங்கியுள்ளார்.

இந்த சிற்றுண்டிச்சாலை நடத்துநர் முன்னரும் பல தடவைகள் சுகாதாரக் குறைபாடுகளுடனேயே சிற்றுண்டிச்சாலையை நடத்திவந்தார் என்றும் பலமுறை அவருக்கு சுகாதார பரிசோதகரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது. எனினும், அவர் சுகாதார குறைபாடுகளை நிவர்த்திசெய்யவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

குறித்த சிற்றுண்டிச்சாலையை நடத்தி வருபவரான யாழ்ப்பாணம் கொட்டடி சீனிவாசகம் ஒழுங்கையைச் சேர்ந்த நபருக்கு எதிராக சுகாதார குறைபாடுகள் காரணமாக முன்னரும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது. அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டு 35 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்தியிருந்தார்.

எனினும், அவர் மீண்டும் சுகாதார சீர்கேடுகளுடனேயே மருத்துவமனையிலுள்ள குறித்த சிற்றுண்டிச்



சாலையை நடத்தி வருகின்றார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

தற்போது அவருக்கு எதிராக 15 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

தொழிலாளர்கள் 8 பேர் மருத்துவ சான்றிதழ் இன்றி அங்கு உணவு கையாண்டமை, தொழிலாளர்கள் 'ஏப்ரன்' இன்றி உணவு தயாரிப்பில் ஈடுபட்டமை, சமையலறையில் உருவாகிய கழிவுகள் அங்கு குப்பைத் தொட்டியில் மூடிய நிலையில் வைக்கப்படவில்லை, உணவு பரிமாறப்படும் பகுதியில் கழிவுகள் தேங்கிக் கிடந்தமை, சமையலறையில் மூடியுடனான குப்பைத் தொட்டிகள் பேணப்படவில்லை, உணவுப் பொருள்கள் அச்சடிக்கப்பட்ட தாள்களின் மீது வைக்கப்பட்டிருந்தமை, நலனுக்கு ஒவ்வாத வகையில் காட்போட் பெட்டியினுள் 52 போண்டாக்கள், 302 வாய்ப்பன்கள், 245 றோல்கள், 166 கிழங்கு றொட்டிகள், 186 வடைகள் என்பனவற்றை துர்நாற்றத்துடன் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை, பழுதடைந்த 5.5 கிலோகிராம் சோற்றை குளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை என்பன தனித்தனி வழக்காகவும், சமையலறையின் உட்பகுதியில் உரிய முறையில் உட்கூரை அமைக்கப்படாமை, உணவு கையாள்வோர் தனிநபர் சுகாதாரம் பேணாது தாடியுடன் உணவு தயாரிப்பில் ஈடுபட்டிருந்தமை, சமையலறையினூடாக செல்லும் கழிவுநீர் வாய்க்கால் சுகாதாரத்துக்கு முரணான வகையில் திறந்த நிலையில் காணப்பட்டமை ஆகிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே, கடந்த 19ஆம் திகதி தோசையுடன் வழங்கப்பட்ட கடலை, கத்தரிக்காய் கொண்ட கறிக்குள் கரப்பான் பூச்சி பொரிந்த நிலையில் காணப்பட்டுள்ளது. உணவு உட்கொள்ளவந்தவர் கடும் மன உளைச்சலுக்கு ஆளாகிவிட்டார். அதனால் அவர் பிரதிப் பணிப்பாளரிடம் எழுத்துமூல முறைப்பாடு வழங்கி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

15 குற்றச்சாட்டுக்கள் கொண்ட வழக்கு எதிர்வரும் 8ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (கு)

ரூ.ஒரு கோடியில் அமையவுள்ள

# அச்சுவேலி சந்தைக்கு நடப்பட்டது அடிக்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

அச்சுவேலி பொதுச் சந்தைக்கென ஒரு கோடி ரூபா சபை நிதியில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான பணியை வலிகாமம் கிழக்கு பிரதேச சபை அடிக்கல் நட்டு ஆரம்பித்துள்ளது என்று சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர்கள், செயலாளர் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர். வலிகாமம் கிழக்கில் 18 ஆயிரம் வரையான விவசாயிகள் வாழ்கின்றனர். அந்த விவசாயிகளுக்கு ஏற்ற சந்தை அமைப்பை துரிதமாக சிறந்த முறையில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. அமையப்பெறும் சந்தைக்கட்டடம் சகலருக்கும் வசதியானதாக வியாபார முயற்சிகளை முன்னெடுக்கத் தக்கதாக அமையவுள்ளது.

அச்சுவேலி பொதுச் சந்தையில் இடப்பற்றாக்குறை காணப்பட்ட நிலையில் ஏற்கனவே வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தற்காலிக கொட்டகைகளை அமைத்து வியாபார முயற்சிகளுக்கு வசதி ஏற்படுத்தி கொடுத்திருந்தது. தற்போது சந்தைக்கென நிரந்தர கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

சந்தை வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள சந்தைக் கட்ட வேலைகளுக்கு ஒத்துழைத்தல் மற்றும் தனியாள் இடைவெளியைப் பேணுதல் அடிப்படையில் தற்போது அச்சுவேலி வல்லை வீதியில் தனியார் கட்டடம் ஒன்றில் சந்தை இயங்கி வருகிறது. (கு)

# பிற மாவட்ட வியாபாரிகளால் யாழ்.பழ வியாபாரிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வெளிமாவட்ட பழ வியாபாரிகள் நுழைந்து பழங்கள் விற்பனை செய்கின்றமையால், உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாம் பழங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகிறோம். நாளாந்தம் வாடகையாக மாநகர சபைக்கு 110 ரூபா செலுத்தி வருகின்றோம். அப்பிள், திராட்சை, தோடை, மாதுளை போன்ற பழங்கள்பெரும்பாலும் அனைத்து பருவங்களிலும் கிடைக்கக்கூடியவை. இந்த பழங்கள் எல்லா இடங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் இலாபம் என்று சொல்வதற்கு இல்லை. ஆனால் ரம்புட்டான், அன்னாசி, மங்குஸ்தான் போன்றவை குறிப்பிட்ட பருவங்களில் மாத்திரம் கிடைக்கக்கூடியவை. அவற்றை நாம் வெளிமாவட்டத்திலிருந்து கொண்டுவந்து இங்கு சிறிய இலாபம் வைத்து விற்பனை செய்கிறோம். பெருந்தொகையான அளவில் விற்பனை செய்யக் கூடிய பழங்கள் இவை.

இவற்றை வெளிமாவட்டத்திலிருந்து வாகனங்களில் கொண்டுவந்து மாநகர சபை ஆளுகைக்கு உட்பட்ட பகுதி வீதி ஓரங்களில் வைத்து விற்கின்றனர். இதனால் தமது வியாபாரம் பாதிக்கப்படுகின்றது என்று பழவியாபாரிகள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் மாநகர சபை ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பழ வியாபாரிகள் கோருகின்றனர். (கு-7)

# கற்கைநெறிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வடக்கு மாகாண மும்மொழிக் கற்கை நிலையத்தால் நடத்தப்பட்ட 2018/2019, 2019/2020 கல்வி ஆண்டுக்குரிய சிங்கள மொழி, ஆங்கிலமொழி மற்றும் தமிழ் மொழிக் கற்கை மற்றும் மாணவர்களுக்கான அனைத்து கற்கைநெறிகளும் கொரோனா பெருந்தொற்றின் பின்னர் நாளை 29ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் வழமையான நேர அட்டவணையின் பிரகாரம் ஆரம்பமாகும் என மும்மொழிக் கற்கை நிலைய பணிப்பாளர் பி.என்.சுதர்சன் அறிவித்துள்ளார். (ம)

# 'கலாதரம்' நூலுக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவு 2020ஆம் ஆண்டு 'கலாதரம்' எனும் பிரதேச மலர் வெளியீடு செய்யப்படவுள்ளது.

எனவே, எமது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பகுதிகள் சார்ந்த விடயங்கள் மற்றும் கலை பண்பாட்டசங்கங்களுடன் தொடர்புடைய விடயங்கள் உள்ளடக்கிய ஆக்கங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவலர்கள், பிரதேச செயலகம், வலி.தென்மேற்கு எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கிடைக்கப்பெறும் ஆக்கங்கள் அனைத்தும் மலர்க்குழுவின் தீர்மானத்தின் பின்னரே பிரசுரிக்கப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)



உருத்திரபுரம் வடக்கில் வசித்து வரும் வறிய குடும்பத்தைச் சேர்ந்த 3 மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. புலம்பெயர் தேசத்தில் (ஜேர்மனி) வசிக்கும் திருமதி சுமதி விஜயரட்ணம் இந்த உதவியை வழங்கியிருந்தார். (ஐ-222)

# கொரோனா வார பரிசோதனை நிறைவு!

சாவகச்சேரி, ஜூன் 28

சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற கொரோனா வார பரிசோதனைகள் நேற்றுடன் நிறைவுக்கு வந்தன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர், பொலிஸார் மற்றும் தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் ஆகியோர் இணைந்து பிரதேசத்தில் இயங்கும் 59 உணவகங்களிலும், 35 சிகை அலங்கரிப்பு நிலையங்களிலும் பரிசோதனைகளை மேற்கொண்டனர். இவற்றில் சில இடங்களில் குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் அவற்றினை நிவர்த்தி செய்யுமாறு அதிகாரிகளால் வலியுறுத்தப்பட்டது.

கொரோனா வாரத்தில் பிரதேசத்தில் உள்ள சந்தைகள், உற்சவம் நடைபெற்ற கோவில்கள், அரச மற்றும் தனியார் நிறுவன அலுவலகங்கள், பொதுப் போக்குவரத்து சேவைகள், திருமண மண்டபங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்கள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள் என்பனவற்றிலும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம-9)

# பாடசாலை உடைத்து பொருள்கள் திருட்டு

வவுனியா, ஜூன் 28

வவுனியா நகரில் அமைந்துள்ள இலங்கை திருச்சபை தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் திருட்டு இடம்பெற்றுள்ளது.

பாடசாலைக்குள் உள்நுழைந்த இனம்தெரியாத நபர்கள் பாடசாலையின் கூட்டுறவு அலுவலகத்தை உடைத்து அங்கிருந்த பொருள்களைத் திருடிச்சென்றுள்ளனர். சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-110)

# சிறைச்சாலைக்கு அலைபேசி கடத்தும் முயற்சி முறியடிப்பு!
## நால்வர் கைது

கொழும்பு, ஜூன் 28

பொரளை, மெகசின் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் உள்ள சிறைக்கைதிகளுக்கு சட்டவிரோதமான முறையில் அலைபேசிகள் மற்றும் பாகங்களை அனுப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது. நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளை பொலிஸார் முன்னெடுத்த நடவடிக்கையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர் ஒருவரின் வீட்டை சோதனை செய்தபோது, சிறைச்சாலைக்கு அனுப்புவதற்கு தயாராக இருந்த நிலையில் அவை மீட்கப்பட்டன. (ம)

# வேட்பாளர்களுக்கு சமவாய்ப்பு தேவை
## கரு ஜயசூரிய வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 28

**தற்போதைய தேர்தல் முறையில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக்கொண்ட சிறிய கட்சிகள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றன. அதற்கான தீர்வுத் திட்டங்கள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக் குழு கவனம் செலுத்த வேண்டும்.**

இவ்வாறு முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தல் பிரசாரங்களுக்காக செலவிடும் நிதியின் அளவு மற்றும் பரப்புரைகளை முன்னெடுப்பதற்கான தேர்தல் தொகுதி என்பன வரையறுக்கப்படாத வரை தற்போதைய தேர்தல் முறையில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக்கொண்ட சிறிய கட்சிகள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்படுகின்றன

இந்தத் தேர்தல் முறைமையானது அனைத்து வேட்பாளர்களுக்குமான சமவாய்ப்புக்களை உறுதிசெய்யவில்லை.

முக்கியமாக வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்ட சிறிய கட்சிகள் இதனால் பாதிக்கப்படுகின்றன.

இவ்வாறு எதிர்மறையான பாதிப்புக்களை எதிர்கொள்பவர்களுக்கான தீர்வுகள் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தவேண்டும்-என்றார். (ப)

www.northshore.lk

Your gateway to
QUALITY HIGHER EDUCATION
from Sri Lanka's state of the art
Modern University




Foundation Programmes in
Engineering
Health Sciences
Computer Sciences

REGISTRATIONS now open for JULY Intake

Foundation programmes leading to BRITISH DEGREES

ஜூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து கொள்வோருக்கு பதிவுக் கட்டணத்தில் 50% கழிவு வழங்கப்படும்.

ENTRY REQUIREMENTS :
- Successful completion of local or London O/Ls

Hot Line : 0715 500 200

T&C apply.
No combined offers and single redemption only.

படைவீரர்கள், பொலிஸ் மற்றும் அரசாங்க சுகாதாரத்துறைசார் நிபுணத்துவ அங்கத்தவர்களுக்கு பாடநெறிக் கட்டணத்தில் 25% புலமைப்பரிசில்

NORTHSHORE INTERNATIONAL CAMPUS
141, church Road, Colombo 15.
Tel : +9411 599 00 00
Email : info@northshore.edu.lk
Northshorelk

# எம்.சி.சி. ஒப்பந்த நிதிக்கு நல்லாட்சி அரசே பொறுப்பு

## ரோஹித அபேகுணவர்தன குற்றச்சாட்டு



**கொழும்பு, ஜூன் 28**

**நல்லாட்சி அரசாங்கம் எம். சி. சி. ஒப்பந்தத்தின் ஊடாக நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுத்துள்ளது. ஒப்பந்தத்தின் முதற்கட்ட நிதியாகக் கிடைத்த 10 மில்லியன் நிதி தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும்.**

இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லாட்சி அரசாங்கம் 480 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் கைச்சாத்திட முயற்சித்த எம். சி. சி. ஒப்பந்தம் குறித்து ஆராய்ந்த மீளாய்வுக் குழுவினர் ஒப்பந்தம் தொடர்பான ஆய்வு அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார்கள். ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தையும் எவ்வித ஒளிவு மறைவுமின்றி மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

எம். சி . சி ஒப்பந்தம் தொடர்பில் நல்லாட்சி அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்து இரகசியத் தன்மையைப் பேணியது. ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் ஏதும் நாடாளுமன்றத்துக்குள்ளும், வெளியிலும் பகிரங்கப்படுத்தப்படவில்லை. காணி அபிவிருத்தி, மற்றும் இரண்டு அளவீடு ஆகிய இரண்டு விடயங்களை உள்ளடக்கிய ஒப்பந்தம் என்று மாத்திரமே குறிப்பிடப்பட்டது. ஒப்பந்தத்தில் முதலிரண்டு பகுதிகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. கைச்சாத்திடும் போது இணக்கம் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் என்ன மற்றும் கிடைக்கப் பெற்ற 10 மில்லியன் நிதிக்கு என்ன நடந்தது என்ற கேள்விகள் பல தற்போது எழுகின்றன. இவற்றுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பொறுப்புக்கூறவேண்டும். என்றார். அதேவேளை, எம். சி.சி. ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைக்கு எந்தவொரு நிதியும் கையளிக்கப்படவில்லை என்றும், செலவு செய்யப்படவில்லை என்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ப)



# சிறுபான்மையினர் ஆதரவும் மொட்டுக்கு அவசியமானதே!

## காமினி லொக்குகே தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 28

சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தினால் மட்டுமே தேசிய நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பமுடியும். எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு முழுமையான ஆதரவு வழங்குவது அவசியமாகும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் பெரமுனவுக்கு ஆதரவு வழங்கவில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் தங்களின் அரசியல் சுய இலாபத்துக்காக ராஜபக்சாக்களுக்கு எதிரான அரசியல் பிரசாரங்களை ஆரம்பத்தில் இருந்து முன்னெடுத்தார்கள்.

வடக்கில் கூட்டமைப்பு, கிழக்கில் முஸ்லிம் அரசியல்வாதிகளின் தவறான சித்திரிப்புக்களையே இன்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கிறார்கள்.

ஜனாதிபதி அனைத்து இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவராகவே செயற்படுகிறார். அரசியல் கட்சிகளை இலக்காகக் கொண்டு அவர் செயற்படவில்லை.

தமிழ், முஸ்லிம் மக்கள் பாரம்பரியமாக முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை விடுத்து யதார்த்த நிலைமையைப் புரிந்து கொண்டு சிறந்த அரசாங்கத்தை உருவாக்க ஒன்றுப்பட வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாக உள்ளது- என்றார். (ப)



# வவுனியாவில் 100 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள்

கொழும்பு, ஜூன் 28

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக வவுனியாவில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் சுமார் 100 பேருக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றை அடுத்து அமெரிக்கா, சிங்கப்பூர், டுபாய் உள்ளிட்ட நாடுகளில் சிக்கியிருந்த இலங்கையர்கள் பலர் அண்மையில் நாட்டுக்குள் அழைத்து வரப்பட்டனர்.

அவர்களில் சுமார் 300க்கும் மேற்பட்டவர்கள் வவுனியாவின் பெரியகாடு, பம்பைமடு, வேலங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் சுமார் 100 பேருக்கு பி.சி.ஆர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-110)

# தேர்தல் வெற்றிச் சூத்திரத்தை மீள புதுப்பித்துள்ளது பெரமுன

## மங்கள தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 28

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொதுத் தேர்தல் பரப்புரையை மேம்படுத்திக் கொடி நட்டுவதற்காக, கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பயன்படுத்தி அதன் ஊடாக வெற்றியைப் பெற்றுக்கொண்ட சூத்திரத்தை மீளப் புதுப்பித்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன் அங்கமாகவே மிலேனியம் சவால் ஒப்பந்தம் தொடர்பில் சர்ச்சைகளை ஏற்படுத்துவதுடன், ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை மையமாகக் கொண்ட முஸ்லிம் எதிர்ப்பு வெறியையும் பரப்பி வருகிறது .இது ஆளுந்தரப்பினரின் பொதுத் தேர்தல் பரப்புரை உத்தி என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர கடுமையாகச் சாடியுள்ளார். (ப)

# ரூ.122 மில்லியன் பெறுமதியான பீடி இலைகள் மீட்பு

கொழும்பு, ஜூன் 28

தமிழ்நாட்டிலிருந்து சட்டவிரோதமாகக் கடத்திவரப்பட்ட 122 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய 24 ஆயிரம் கிலோ பீடி இலைகள் கடந்த வியாழக்கிழமை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

சுங்கக் கட்டுப்பாட்டுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையிலேயே இவை கைப்பற்றப்பட்டன.

40 அடி நீளமான இரு கொள்கலன்களில் பீடி இலைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

3 மாதங்களுக்கு முன்னர் சென்னையில் இருந்து இறக்குமதி செய்வதற்காக போலி ஆவணங்களைக் கொண்டு அனுமதி பெற்றிருந்த தொழிற்சாலை ஒன்றின் ஊடாக இவை கடத்திக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-ரி1)

# பொருளாதாரத்தை இலங்கை மீட்கும்

## ரமேஷ் பத்திரன நம்பிக்கை



கொழும்பு, ஜூன் 28

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள உலகின் வேறு எந்த நாட்டுக்கும் முன்பாக இலங்கை தனது பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் என அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;

பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கத்திடம் தெளிவான பொருளாதார வேலைத்திட்டங்கள் உள்ளன. கொரோனா வைரஸால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள 6.1 மில்லியன் குடும்பங்களுக்கு 60 பில்லியனுக்கும் அதிகமான நிவாரணத்தை அரசாங்கம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச முதல் அனைவரும் தனிப்பட்ட செலவுகளைக் குறைப்பதன் மூலம் முன்மாதிரியான பங்கைக் கொண்டிருந்தனர். இதுபோன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையால் இலங்கை தனது பொருளாதாரத்தை அண்டை நாடுகளுக்கு முன்பாக மீட்டெடுக்க வாய்ப்புள்ளது - என்றார். (ப)

# 222 கடற்படையினர் வீடு திரும்பினார்கள்

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 222 கடற்படையினர் நேற்று வீடுகளுக்குத் திரும்பினர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்று இலங்கைக் கடற்படைக்குள் ஊடுருவியதை அடுத்து, வெலிசற கடற்படை முகாமைச் சேர்ந்த 250 கடற்படையினர் கேப்பாபிலவு விமானப் படைத்தளத்தில் கடந்த 40 நாள்களாகத் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களில் 222 பேரே தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடு திரும்பினர். 27 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். எஞ்சிய ஒருவர் பிறிதொரு சுகவீனத்துக்காக சிகிச்சை பெற்று வருகின்றார். (ம-19)

# கொரோனாவை தடுக்க சிறப்புச் செயற்றிட்டம்!

*விமான நிலையத்தில் முன்னெடுப்பு*

கொழும்பு, ஜூன் 28

விமான நிலையத்தில் பயணிகள் வருகைக்கான சிறப்புச் செயற்றிட்டம் ஒன்று பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய நிர்வாகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டல்களுக்கு அமைவாக வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான அனைத்து முற்பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் இராணுவம் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரால் உரிய தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

விமான நிலையத்தில் நாட்டிலிருந்து வெளியேறும் பயணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பகுதி மேலும் விரிவாக்கப்பட்டதுடன், நவீன முறையில் ஆசனங்களும் வடிவமைக்கப்பட்டன.

விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தினாலும், எமது சேவையுடன் தொடர்புடைய, ஏனைய தரப்பினராலும் பயணிகளின் சௌகரியத்தையும், பாதுகாப்பையும் முன்நிறுத்தியே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி1)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# திருப்பி அனுப்பப்பட்டன விசாரணைக் கோப்புகள்

கொழும்பு, ஜூன் 28

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுடன் தொடர்புடைய, 40 விசாரணைக் கோப்புகள் பதில் பொலிஸ்மா அதிபருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. சட்டமா அதிபர் திணைக்களத்தால் இவை திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷார ஜயவர்தன தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களையடுத்து நாடு முழுவதும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பில் அனுப் பப்பட்ட விசாரணை அறிக்கை அடங்கிய கோப்புகளில் 40 கோப்புகள் முழுமையாக நிறைவு செய்யப்படாது காணப்பட்டமையை அடுத்து இவை சட்டமா அதிபரால் பதில் பொலிஸ்மா அதிபருக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ப)






**DFCC Teen உடன் இணையுங்கள்**

**Teen என்பது திறமைகளை வளர்க்கும் வயது.**

வீட்டில் சின்னச் சின்ன வேலைகள் செய்து கிடைக்கும் **Pocket Money, Gifts** ஆகக் கிடைக்கும் பணம் ஆகியவற்றைச் சேர்த்து **DFCC Teen Account** இல் சேமியுங்கள்.

உங்கள் பெயரிலேயே **Debit Card** உட்பட மேலும் பல நன்மைகளை நீங்களும் பெற்றுக்கொள்ளுங்கள்.

Teen வயதிலுள்ள அனைவருக்கும் ஏற்ற DFCC Teen Account ஐ ஆரம்பிக்க நீங்களும் இன்றே அருகிலுள்ள கிளைக்கு வாருங்கள்.




24 மணிநேர அழைப்பு மையம்: 0112 350000
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# சுகாதார அறிவுறுத்தல்களை பொலிஸாரே மீறுகின்றனர்

## யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்தநிலை

யாழ்ப்பாணம், ஜூன் 28

முகக் கவசங்களை அணியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் சுகாதார பரிந்துரைகளைக் கடைப்பிடிக்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளாரெனினும், யாழ்ப்பாணத்தில் பொலிஸார் முகக் கவசம் அணியாது, சுகாதார பரிந்துரைகளை மீறி செயற்பட்டுவருகின்றனர் என்று பல தரப்பினராலும் கூறப்படுகின்றது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த நான்கு பொலிஸார் யாழ்ப்பாணம் திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள பூட்டிய கடை ஒன்றின் முன்பாக சிவில் உடையில், முகக் கவசம் அணியாது நின்று இரவு 10.30 அளவில் வீதிகளில் செல்பவர்களை வழிமறித்து எங்கே செல்கின்றீர்கள்? என்று விசாரணை செய்துகொண்டிருந்தனர். நீங்கள் யார் என்று கேட்டவர்களுக்கு தாம் கோப்பாய் பொலிஸார் எனவும் சந்தேகம் இருந்தால் பொலிஸ் நிலையம் சென்று விசாரிக்கும் படியும் பதில் கூறியுள்ளனர்.

அதேவேளை, யாழ்ப்பாண பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த பொலிஸார் இருவரில் ஒருவர் முகக் கவசம் அணியாது கடமையில் ஈடுபட்டிருந்தார்.

வடமராட்சி மாலு சந்தியில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்துக்கு சென்றவர்களை கையுறைகள் இன்றி தொட்டு சோதனை செய்த பொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் கண்டனம் தெரிவித்த ஊடகவியலாளர் மீது, தமது கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்று குற்றஞ்சாட்டிநெல்லியடி பொலிஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இவ்வாறு பொலிஸாரின் செயற்பாடுகள் இருக்கும் நிலையில், முகக் கவசம் அணியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் சுகாதார பரிந்துரைகளை ஏற்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண கூறுகின்றார். (த-26)



## கருங்கற்களுக்கிடையே மறைத்து கடத்திய பாலைக் குற்றிகள் மீட்பு

கிளிநொச்சி, ஜூன் 28

டிப்பர் வாகனத்தில் கருங்கற்களுக்குள் மறைத்துக் கடத்திய பாலை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றைக் கடத்தினாரென்ற குற்றச்சாட்டில் வாகன சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கடத்தப்பட்ட மரக்குற்றிகளே கடந்த வியாழக்கிழமை பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

தமக்குக் கிடைத்த தகவலின்படி வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோதே அவை கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.மேலும் அவர் மீது வழக்குத் தொடரப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (த-113)

கல்வியியற் கல்லூரிகள், கலாசாலைகளின்

## சகல விரிவுரையாளர்களும் நாளை முதல் கடமைக்கு!

யாழ்ப்பாணம், ஜூன் 28

நாட்டில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மற்றும் ஆசிரிய மத்திய நிலையங்களின் விரிவுரையாளர்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் கடமைக்குத் திரும்ப வேண்டும் என்று கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக்கான பிரதம ஆணையாளர் அறிவித்துள்ளார்.

எனினும், ஆசிரிய பயிலுநர்கள் அன்றைய தினம் சமூகமளிக்கத் தேவையில்லை என்றும் அவர்கள் கல்லூரிகளுக்கு சமூகந்தரவேண்டிய நாள் குறித்துப் பின்னர் அறியத்தரப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (த)



அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை விடத்தற்பளை இராணுவ முகாம் சிப்பாய்கள் கிருமித் தொற்று விசிறினர். கொரோனா வைரஸ் தொற்று காரணமாக 3 மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்த பாடசாலைகள் நாளை திங்கட்கிழமை மீள ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-159)

வாக்கெடுப்பு நிலையங்களில்

## வசதியை உறுதிப்படுத்த மும்முரமான பணிகள்

மூளாய், ஜூன் 28

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நிலையங்களின் அமைவிடம் மற்றும் அவற்றுக்கான வசதிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை யாழ்ப்பாணம் தேர்தல்கள் அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தற்போது தேர்தலுக்கான ஏற்பாடுகள் சூடுபிடித்துள்ளன. இதன் ஒரு கட்டமாக தேர்தல் மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்கெடுப்பு நிலையங்களினதும் தற்போதைய நிலை குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

கொரோனாவுக்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் மற்றும் சுகாதார விதிமுறைகள் , தனியாள் இடைவெளி பேணுவதற்கான ஏற்பாடுகள் உட்பட வழமையான தேர்தல் ஏற்பாடுகளைவிட மேலதிகமான வசதிகள் பலவற்றை மேற்கொள்ளவேண்டியுள்ளன என்றும் அவை தொடர்பான தகவல்கள் திரட்டப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-121)



## வடமராட்சி பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவூட்டல்

பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும்போது கொவிட் 19 முற்பாதுகாப்பு நடவடிக்கை சம்பந்தமான அறிவூட்டல் நிகழ்வு வடமராட்சி கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கு பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சூரிகா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கொவிட் -19 கட்டுப்பாட்டு விழிப்புணர்வு மற்றும் பாடசாலைகளை மீளத்திறப்பதற்கான வழிகாட்டல் அறிவுறுத்தல்களை பருத்தித்துறை பிரிவு 2 பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் வழங்கினார்.

பல்லூடகமூடாக வழங்கப்பட்ட இந்தத் தெளிவூட்டல் நிகழ்வில் அதிபர்கள் எழுப்பிய சுகாதார நடைமுறைகள் பற்றிய சந்தேகங்களுக்கு பதில் வழங்கப்பட்டது. (த-9)

## இணையத்தள யோகாசனத்தில் யாழில் ஐவருக்கு பதக்கங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

6ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்திய தூதரகம், சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம், கொழும்பு அஷ்டாங்க யோக மந்திர் ஆகியன இணைந்து நடத்திய தேசிய ரீதியிலான இணையத்தள வழியான யோகாசனப் போட்டி கடந்த 18ஆம் 19ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் பருத்தித்துறை ஞானாலய யோகா மாணவர்கள் 5 பதக்கங்களை வென்றனர். ஆசான் மா. இரத்தினசோதி பயிற்றுவித்த மாணவர்களே இந்தப் பதக்கங்களைப் பெற்றனர்.

8-13வயது பிரிவில் இ.ரதுசன் வெள்ளிப் பதக்கம், 42-51வயது பிரிவில் தோ.புஷ்பதாஸ் தங்கப்பதக்கம்,க. இளங்கோ வெள்ளிப் பதக்கம், பெண்களின் 42-51 வயது பிரிவில் மு.மாலதி வெள்ளிப்பதக்கம், 51வயதுக்கு மேற் பிரிவில் சோ.முகுந்தன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

இந்தப் போட்டிகளில் 39 யோகா நிலையங்கள் கலந்துகொண்டன. 475 க்கும் அதிகமான போட்டியாளர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். இந்தப் போட்டிக்கு பல்வேறு நாடுகளைச்சேர்ந்த சர்வதேச நடுவர்கள் நடுநிலை வகித்தார்கள்.

8வயதிலிருந்து 51வயதுக்கு மேல் வரை 7பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றன. (த)

## கடலுணவுகளின் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் ஆழ்கடல் சென்று மீன்பிடிப்பதை மீனவர்கள் தவிர்த்துள்ளனர். இதனால் கடலுணவுகளின் வருகை குறைந்துள்ளது.

யாழ்.குடா கடற்பரப்பு மற்றும் வடமராட்சி, தீவுப் பகுதி போன்ற ஆழ் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லவில்லை.

அதனால் மீன்சந்தைகளுக்கு மிகவும் குறைந்தளவு மீன்களே வந்து சேர்கின்றன. இதனையடுத்து விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# முகக்கவசமும் தனிமைப்படுத்தலும்

இனிமேல் பொது இடங்களில் முகக்கவசமின்றி நடமாடுவோர் 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு கண்டிப்பான உத்தரவை இட்டுள்ளது. கொரோனாவைப் பரவாமல் தடுப்பதில் கை கழுவுதலும், முகக்கவசம் அணிதலுமே மிகச் சிறந்த முன்காப்பு நடவடிக்கைகளாக உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அந்தவகையில் முகக்கவசம் இல்லாமல் பொது இடங்களில் நடமாடுவோர் கொரோனாவை வலிந்து வாங்கவோ, பரப்பவோ சாதகமற்ற சூழலை முகக்கவசங்களை அணிவதன் மூலம் உண்டாக்கலாம். அந்தவகையில் இதுவொரு நல்லதிட்டமே.

ஆனாலும் முகக்கவசம் என்ற பதத்துக்குள் எல்லாவகையான முகக்கவசங்களும் உள்ளடக்கப்படுவதால், எப்படியான முகக்கவசங்களை அணியலாம் என்ற தெளிவையும் இந்த அறிவிப்பின்போது மக்களுக்குக் கொடுத்திருக்க வேண்டியது அரசின் கடமை. இல்லாவிட்டால் கைக்குட்டை முதல் உள்ளாடைகள் வரை எல்லாவற்றையுமே முகக்கவசமாக அணியும் வல்லமை பெற்றவர்கள் நாங்கள். எனவே எந்தவகையான முகக்கவசங்களை அணியவேண்டும் என்ற சரியான வரையறை செய்யப்பட்ட பின்னரே இந்தத் தனிமைப்படுத்தல் தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் முகக்கவசம் அணியாமல் நடமாடிக் கொண்டிருந்த ஒருவர் , பொலிஸாரைக் கண்டவுடன் சட்டென தன்னுடைய அசுத்தமான ஒரு கைக்குட்டையை எடுத்து முகத்தில் கட்டிக்கொண்டு " நான் முகக்கவசம் அணிந்துதான் இருக்கிறேன்" என சட்டம் கதைத்தால் பொலிஸாரால் எதுவுமே செய்ய முடியாது.

உண்மையில் 3 விதமான முகக்கவசங்களே தொற்று நோய்களில் இருந்து நம்மைப் பாதுகாக்கும் தன்மையைக் கொண்டிருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். சத்திரசிகிச்சையின்போ து அணியும் 'சேர்ஜிக்கல் முகக்கவசம்', அக்டிவேட் கார்பன் முகக்கவசம், என் 95 முகக்கவசம் என்பனவே அவ்வாறு கொரோனா போன்ற தொற்றுக்களில் இருந்து பாதுகாக்கக்கூடியவை. ஏனையவை எல்லாமே 'நானும் ரௌடிதான்' என்பது போல, 'நாங்களும் முகக்கவசங்கள் தான்' என்று பெயருக்குத்தான் இருக்கின்றனவே தவிர அவற்றால் எந்தப்பயன்பாடும் கிடையாது. சிலவேளைகளில் அவ்வாறான பாதுகாப்பற்ற முகக்கவசங்களை அணிவதன் மூலம், தேவையற்ற நோய்களைகளையும் புதிதாக வருவித்தவர்களாக மாறும் நிலையும் ஏற்படும். குறிப்பாக இப்போது இலங்கையர்களில் அநேகர் துணிகளால் தைக்கப்பட்ட முகக்கவசங்களையே அணிகிறார்கள். விலையும் குறைவு, அடிக்கடி தோய்த்து நீண்டகாலம் பயன்படுத்தமுடியும் என்னும் சில காரணிகளே இந்தவகையான முகக்கவசங்களை அணியக் காரணம். ஆனால் துணிகளில் உள்ள துவாரங்களூடாக எல்லாவகையான வைரஸ்களும் தம்மிஷ்டப்படி ஓடித்திரிந்து விளையாடமுடியும்.

இப்போது 'முகக்கவசத்தைக் கட்டாயம் அணியவேண்டும், தவறுவோர் தனிமைப்படுத்தலுக்குச் செல்லவேண்டும்' என அறிவிக்கப்பட்டுள்ளதால், பெரும்பாலானோர் துணியிலான முகக்கவசங்களை அணிவதையே தொடரப்போகிறார்கள். அப்படித் துணிமுகக்கவசங்களை அணிவதும் ஒன்றுதான், அணியாமல் செல்வதும் ஒன்றுதான். எனவே 'சேர்ஜிக்கல் முகக்கவசம்', அக்டிவேட் கார்பன் முகக்கவசம், என் 95 முகக்கவசம் என்பவற்றை மட்டுமே அணியவேண்டும் எனவும், தவறுவோர் மீது தனிமைப்படுத்தல் நடவடிக்கை பாயும் எனவும் அரசு தெளிவாக அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லோரும் முகக்கவசம் அணிந்திருப்பதான மாயையை உண்டாக்க துணிமுகக்கவசங்களை அணிந்து, கொரோனா பரவுவதை அதிகரிப்பார்களே தவிர குறைக்க முடியாது.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்த முகக்கவசம் அணியாதோருக்கு தனிமைப்படுத்தல் என்ற தண்டனையை சாதாரண அப்பாவிகள் மீது மட்டுமே பிரயோகிக்காமல் , போர் வெற்றி விழா, பிறந்தநாள் கொண்டாட்டம் என்பவற்றில் முகக்கவசம் அணியாமல் கலந்துகொண்ட நாட்டின் உயர் அரசியல்வாதிகள் மீதும் ஏவி, அவர்களையும் தனிமைப்படுத்த வேண்டும். ஏனெனில் கொரோனாவுக்கு யார் அதிகாரி, யார் ஜனாதிபதி, யார் சாதாரண மக்கள் என்ற பேதங்கள் எல்லாம் தெரியாதே.

# புதிய தீயணைப்பு வாகனம் ஒன்றை யாழ். மாநகர சபைக்குத் தாருங்கள்

## ஜனாதிபதிக்கும் அமைச்சுக்கும் பதில் முதல்வர் கடிதம்

**யாழ்ப்பாணம், ஜூன் 28**

**யாழ்ப்பாண மாநகர சபையிலுள்ள தீ அணைப்பு வாகனம் அண்மைய விபத்தை அடுத்து மீளப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், மாற்று வாகனம் வழங்க உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதியிடமும் உள்ளூராட்சி அமைச்சிடமும் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாண மாநகர பதில் முதல்வர் து.ஈசன் கடிதம் மூலமாக இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த 22ஆம் திகதி அவர் இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

மாநகர அவசர தீ அணைப்பு வாகனம் நீர்வேலியில் கடந்த 16ஆம்திகதிவிபத்துக்குள்ளாகியிருந்தது. அதன்போது தீயணைப்பு வீரர் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

அந்த வாகனம் மீளப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இந்த வாகனம் வடக்கு மாகாணத்தில் முக்கிய வகிபாகம் வகித்திருந்தது என்றும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# கட்டுக்கரைக்குள வாய்க்காலில் கதவுகள் விஷமிகளால் உடைப்பு

## வீண்விரயமானது 100 அடி ஏக்கர் தண்ணீர்

மன்னார், ஜூன் 28

மன்னார் கட்டுக்கரைக் குளத்தின் 12 ஆம் கட்டை பிரதான வாய்க்காலின் கதவுகள் விஷமிகளால் உடைக்கப்பட்டு, தண்ணீர் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது என்று மன்னார் நீர்ப்பாசன திணைக்களப் பணிப்பாளர் தவராசா யோகராசா தெரிவித்தார்.

கட்டுக்கரைக் குளத்தின் பிரதான நீர் ஊட்டல் வாய்க்கால்களில் ஒன்றான 12 ஆம் கட்டை வாய்க்காலின் கதவு விஷமிகளால் நேற்று முன்தினம் இரவு ஒன்பது மணியளவில் உடைக்கப்பட்டுள்ளது. அதனால் 100 அடி ஏக்கர் தண்ணீர் வீண் விரயம் செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளர் மற்றும் வாய்க்கால் அமைப்பு தலைவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கட்டுக்கரைக் குளத்தின் வாய்க்கால் உடைக்கப்பட்டது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு முருங்கன் நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் கோரப்பட்டுள்ளது என்று முருங்கன் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் தவராசா யோகராசா தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தின் விவசாயிகளின் நன்மை கருதியே கட்டுக்கரைக் குளத்தில் தண்ணீரைச் சேமித்து விவசாய நடவடிக்கை மற்றும் மேட்டுப் நிலப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வருகின்றோம். விஷமிகளின் இவ்வாறான செயல்களால் இந்தமுறை செய்துள்ள ஆயிரத்து 250 ஏக்கர் சிறுபோகம் பட்டுப் போகும் நிலை ஏற்படலாம். எனவே காழ்ப்புணர்ச்சிகளால் குளங்களை உடைத்து தண்ணீரை வீண் விரயம் செய்யும் நடவடிக்கை கண்டிக்கத்தக்கது. இந்தச் செயற்பாடானது எதிர்கால மன்னார் மாவட்டத்தின் அனைத்து விதமான வளர்ச்சியையும் பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

(சு-213)

# மீளத் திறக்கப்படுகின்றது யாழ்ப்பாணக் கோட்டை

யாழ்ப்பாணம், ஜூன் 28

சுற்றுலாப் பயணிகள் பார்வையிட ஏதுவாக, யாழ்ப்பாண கோட்டை எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் திறந்து வைக்கப்படுகிறது.

மத்திய கலாசார நிதியமானது புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த மார்ச் 17ஆம் திகதியிலிருந்து தேசிய மரபுரிமை சின்னங்களில் ஒன்றான யாழ்ப்பாணக் கோட்டையை சுற்றுலாப் பயணிகளை பார்வையிடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்பொழுது மீண்டும் நாட்டில் ஏற்பட்டுள்ள சாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சு வழங்கிய அறிவுறுத்தல்களுடன் எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் காலை 7 மணியிலிருந்து மாலை 6 மணி வரை பார்வையிட முடியும். தொல்லியல் மையத்தை பார்வையிடுவதற்காக பாடசாலை சீருடையில் வரும் மாணவர்களுக்கு அனுமதி இலவசம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

# நித்திரைக்கு அதிக நேரம் செலவிடும் இலங்கையர்

கொழும்பு,ஜூன் 28

இலங்கையர்களில் பலரும் அதிக நேரத்தை நித்திரைக்குச் செலவு செய்கின்றனர் என்று ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆள்களைப் பதிவுசெய்யும் திணைக்களம் இந்த ஆய்வை நடத்தியுள்ளது.

இதில் 24 மணிநேரத்தில் தனிநபர் ஒருவர் தூக்கத்துக்காக 8 மணித்தியாலமும் 6 நிமிடங்களையும் செலவு செய்கின்றார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் 8 மணித்தியாலம் 18 நிமிடங்கள் ஒரு நாளில் நித்திரை செய்கின்றனர். 20 வயது தொடக்கம் 54 வயது வரை உள்ளவர்கள் தினமும் 7 மணித்தியாலமும் 30 நிமிடங்கள் வரை நித்திரை செய்கின்றனர்.

இதேவேளை தொழில் செய்யும் பிரிவினர் தினமும் 7 மணித்தியாலமும் 6 நிமிடங்களும் நித்திரைக்காகச் செலவு செய்கின்றனர்.

இதேவேளை தொடர்பாடல், விநோத சுற்றுலாக்களுக்கு அதிகளவு ஆண்களே ஈடுபாடு கொண்டுள்ளனர். பெண்களில் இதன் வீதம் 88.4 ஆகவும், ஆண்களின் வீதம் 90.6 ஆகவும் உள்ளது.

எவ்வாறாயினும் நோயற்ற வாழ்வுக்குத் தினமும் 6 தொடக்கம் 8 மணித்தியாலம் நித்திரை அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (க)

# தமிழ் வேட்பாளர்களை நோக்கி




■ நிலாந்தன்

நீங்கள் எந்த கட்சியைச் சேர்ந்தவராகவும் இருக்கலாம் ஆனால் ஆயுதப் போராட்டத்துக்குப் பின்னரான கடந்த 11 ஆண்டுகால அரசியலை முன்வைத்து உங்களிடம் சில கேள்விகளை கேட்க வேண்டியிருக்கிறது உங்களுடைய அரசியல் நிலைப்பாடுகள் வேறுபடலாம் ஆனால் உங்களுடைய வாக்காளர்கள் பெரும்பாலானவர்கள் தமிழ் மக்களே எனவே தமிழ் மக்களின் நிரந்தர பிரச்சினைகள் தொடர்பாகவும் அன்றாட பிரச்சினைகள் தொடர்பாகவும் உங்களிடம் இருக்கக்கூடிய வழி வரைபடம் என்ன ? அதை அடைவதற்கான அரசியல் உபாயம் என்ன ?என்பதை நீங்கள் பகிரங்கப்படுத்த வேண்டும் அந்த அடிப்படையிலேயே இக் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

**கேள்வி 1:** மிகவும் அடிப்படையான கேள்வி தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமா அல்லது சிறுபான்மை இனமா?

**கேள்வி 2:** தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றால் எந்த அடிப்படையில் அவர்களை நீங்கள் தேசிய இனம் என்று வரையறுக்கிறீர்கள் ?அப்படி இல்லை என்றால் இந்த அடிப்படையில் அவர்களை சிறுபான்மை இனம் என்று வரையறுக்கிறீர்கள்?

**கேள்வி 3:** தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றால் இச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள் இருப்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

**கேள்வி 4:** அவ்வாறு ஏற்றுக்கொண்டால் தமிழ் மக்கள் ஒரு தேசம் என்பதன் அடிப்படையில் எப்படிப்பட்ட ஒரு தீர்வை நீங்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன் வைக்கிறீர்கள்?

**கேள்வி 5:** தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றால் 2009 மே மாதம் வரையிலும் நடந்தவற்றை இனப்படுகொலை என்று ஏற்றுக் கொள்கிறீர்களா?அதற்குப் பின்னரும் அரச திணைக்களங்களுக்கூடாக நடைபெற்றுவருகின்றவை நன்கு திட்டமிடப்பட்ட கட்டமைப்புசார் இனப்படுகொலை தான் என்பதனை ஏற்றுக்கொள்கிறீர்களா?

**கேள்வி 6:** அப்படி அது இனப்படுகொலை என்று ஏற்றுக்கொண்டால் அந்த இனப்படுகொலையை நிரூபிக்கத் தேவையான சான்றாதாரங்களை நீங்கள் எப்படிப்பட்ட அனைத்துலக பொறிமுறை ஒன்றுக்கூடாக விஞ்ஞானபூர்வமாக திரட்டி வைத்திருக்கிறீர்கள்?

**கேள்வி 7:** இனப்படுகொலைதான் நடந்தது என்பதனை நிரூபிக்கத் தேவையான சான்றாதாரங்களை கடந்த 11 ஆண்டுகளில் அனைத்துலக சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஞ்ஞானபூர்வமான ஒரு முறைமைக்கூடாக திரட்டவில்லையென்றால் ஏன் திரட்ட முடியவில்லை ?இனிவரும் ஐந்தாண்டுகளில் அப்படி திரட்டுவதற்கான வழிவரைபடம் ஏதும் உங்களிடம் உண்டா?

**கேள்வி 8:** நடந்தது இனப்படுகொலை என்றால் இனப்படுகொலைக்கு எதிரான பரிகார நீதியே இனப்பிரச்சினைக்கான தீர்வும் ஆகும் என்பதனை நீங்கள் கொள்கை அளவிலும் செயல்பூர்வமாகவும் ஏற்றுக் கொள்கிறீர்களா?

**கேள்வி 9:** அவ்வாறு பரிகார நீதிதான் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்று நம்பினால் அதைக் குறிப்பாக உங்களுடைய தேர்தல் அறிக்கையிலும் பிரச்சாரங்களிலும் முன் வைப்பீர்களா?

**கேள்வி 10:** அவ்வாறு முன்வைக்கும் போது பரிகார நீதியை வென்றெடுப்பதற்கான செயல்பூர்வ வழி வரைபடத்தை உங்கள் தேர்தல் அறிக்கைகளில் முன் வைப்பீர்களா ?

**கேள்வி 11:** தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் கேட்பது பரிகார நீதியை. ஆனால் உலக சமூகம் தமிழ் மக்களுக்கு தர முன்வந்திருப்பது நிலை மாறுகால நீதியை. அப்படி என்றால் நிலை மாறுகால நீதியிலிருந்து பரிகார நீதியை நோக்கி செல்வதற்குரிய உங்களுடைய வழி வரைபடம் என்ன?

**கேள்வி 12:** குறிப்பாக ராஜபக்சவின் இரண்டாவது ஆட்சியில் நிலைமாறு கால நீதியையே அரசாங்கம் நிராகரிக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகம் உண்டு. ஆயின் நிலை மாறுகால நீதியை வென்றெடுப்பதற்கு தேர்தல் வழிமுறைகளுக்கும் அப்பால் உபாயங்கள் உண்டா? அவை யாவை?

**கேள்வி13:** நடந்தது இனப்படு கொலை இல்லை என்றால் அது என்ன ? அதை எந்த அடிப்படையில் இனப்படுகொலை இல்லை என்று கூறுகிறீர்கள்?

**கேள்வி 14:** தேசிய விடுதலை தான் சமூக விடுதலையும் என்று உறுதியாகக் கூறுவீர்களா?

**கேள்வி 15:** அப்படிக் கூறுவீர்களாயின் உங்களுடைய வேட்பாளர்களில் எத்தனை பேர் பிற்படுத்தப்பட்ட சமூக பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்?

**கேள்வி 16:** உங்களுடைய வேட்பாளர்களில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் வெற்றிவாய்ப்பை கொண்டவர்கள்? அவர்களை நீங்கள் நட்சத்திர அந்தஸ்துடைய கட்சி பிரமுகர் ஒருவர் வெல்வதற்காக தனது சமூகத்தின் வாக்குகளை வாங்கித் தந்துவிட்டு தோல்வியுறும் ஒரு பலியாடாகத்தான் பயன்படுத்தவில்லை என்பதைப்படி நிரூபிப்பீர்கள்?

**கேள்வி17:** அப்படி நிரூபிப்பது என்றால் ஒரு பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் போட்டியிடும் தொகுதியில் இருந்து நட்சத்திர அந்தஸ்துடைய கட்சி பிரமுகரை அகற்றுவீர்களா? அல்லது குறைந்தபட்சம் அவர் வென்றாலும் தோற்றாலும் தேசியப் பட்டியலில் அவருக்கு இடம் வழங்கப்படும் என்று உறுதியாகக் கூற உங்களில் எத்தனை பேர் தயார்?

**கேள்வி 18 :** இனப்பிரச்சினைக்கு உரிய நிரந்தர தீர்வுக்கும் அப்பால் யுத்தத்தின் விளைவாக தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அன்றாடப்பிரச்சினைகளுக்கு உங்களுடைய தீர்வுக்கான வழி வரைபடம் என்ன? கேள்வி 19அரசியல் கைதிகளுக்கு எப்படி விடுதலை பெற்றுக் கொடுப்பீர்கள்?

**கேள்வி 20:** ஆக்கிரமிக்கப்பட்ட இருக்கும் காணிகளை எப்படி முழுமையாக விடுவித்துக்கொடுப்பீர்கள்?

**கேள்வி 21:** காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு எப்படி நீதியையும் நிவாரணத்தையும் பெற்றுக் கொடுப்பீர்கள்?

**கேள்வி 22:** 2009க்கு பின்னரும் அரச திணைக்களங்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் கட்டமைப்பு சார் இனப்படுகொலையை தடுப்பதற்கு உடனடியான வழிவகைகள் என்ன ? அதற்குரிய வழி வரைபடம் என்ன?

**கேள்வி 23:** தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக் கொண்டால் தமிழ் மக்களின் தேசத்துக்கு உரிய வெளியுறவுக் கொள்கை என்ன? அந்த வெளியுறவுக் கொள்கையை பகிரங்கமாக முன்வைப்பீர்களா ?

**கேள்வி 24 :** தமிழ் மக்களின் பிரச்சினைகள் அனைத்துக்குமான தீர்வை பிரதிநிதித்துவ அரசியல் என்ற ஒரே வழிமுறைக்கூடாக மட்டும் அடைந்து விடலாமா? அல்லது ஒரு தமிழ் தேசிய இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உண்டா ?அப்படியொரு தமிழ்த் தேசியக் கட்டமைப்பை தேசியப் பேரியக்கத்தை கடந்த 11 ஆண்டுகளாக நீங்கள் ஏன் கட்டவில்லை ?இனிமேலும் அவ்வாறு கட்டி எழுப்புவீர்கள் என்று எப்படி நம்புவது?

**கேள்வி 25:** இனப்பிரச்சினை சாராம்சத்திலும் நடைமுறையிலும் ஒரு உள்நாட்டு பிரச்சினை அல்ல. அது ஒரு அனைத்துலக பிரச்சினை. அதற்கு அனைத்துலக அளவிலும் பிராந்திய அளவிலும் உருவாக்கப்படும் ஒரு தீர்வே நிரந்தரமாக அமையும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**கேள்வி 26:** அப்படி நம்பினால் தீர்வை அடைவதற்கு தாயகம் தமிழகம் புலம்பெயர்ந்த தமிழர்கள் என்ற மூன்று கட்டமைப்புகளையும் ஒன்றிணைத்து போராட வேண்டிய அவசியத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா? ஆயின் அதற்குரிய வழி வரைபடம் என்ன?

**கேள்வி 27:** கடந்த பதினோரு ஆண்டுகளாக அப்படி ஒரு வழி வரைபடம் உங்களிடம் இருந்ததா? அதன் மூலம் நீங்கள் சாதித்தவை என்ன ? சாதிக்க முடியாதவை என்ன? சாதிக்க முடியாதவற்றுக்குக் காரணம் என்ன? இனிமேலும் வரும் 5 ஆண்டுகளில் அதை சாதிப்பீர்கள் என்று எப்படி நம்புவது?


**கேள்வி 28:** கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக நீங்கள் மக்கள் பிரதிநிதிகளாக இருந்திருந்தால் உழைத்திருப்பீர்கள் தானே ? உங்களுடைய மொத்த சொத்து விபரம் என்ன?

**கேள்வி 29:** ஆயுதப் போராட்டத்தை உங்களுடைய பிரசார நடவடிக்கைகளில் எந்த அடிப்படையில் பயன்படுத்துகிறீர்கள்?

**கேள்வி 30:** உங்களுடைய பிரசார நடவடிக்கைகளில் பயன்படுத்தும்பொழுது அதை நீங்கள் ஒரு வேஷமாக அல்லது முகமூடியாக அல்லது ஊன்றுகோலாக அல்லது ஊறுகாய் போல பயன்படுத்தவில்லை என்று உங்களால் நிரூபிக்க முடியுமா? குறிப்பாக கடந்த 11 ஆண்டுகளில் நீங்கள் ஆயுதப் போராட்டத்தை விசுவாசமாகவும் இதயசுத்தியுடனும் பயன்படுத்தினீர்கள் என்பதற்கு ஆதாரங்களை காட்டுவீர்களா?

மேற்கண்ட கேள்விகளுக்கு நீங்கள் பதில் கூறலாம் கூறாமல் விடலாம். ஆனால் கேள்விகள் உங்களை நோக்கி மட்டும் தொடுக்கப்படவில்லை.

உங்களுக்கு வாக்களிக்கப்போகும் மக்களை நோக்கியும் தொடுக்கப்படுகின்றன. அவர்களுடைய புத்தி சாலித்தனத்தை நோக்கியும் மறதியை நோக்கியும் மனசாட்சியைநோக்கியும் இக்கேள்விகள் முன்வைக்கப்படுகின்றன.



# நடராஜப் பெருமானுக்கு
# ஆனி உத்தர திருமஞ்சனம்

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம்



ஆனித் திருமஞ்சன விழா இன்று நடராசப் பெருமானுக்கு சிறப்பாக நடைபெறுகிறது. நடராசப் பெருமானுக்கு ஓர் ஆண்டில் இரண்டு பெரிய திருவிழாக்கள் எடுக்கப்படுகின்றன. அவை மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நன்னாளிலும் ஆனி மாதத்தில் உத்தர நட்சத்திரம் கூடிய நன்னாளிலும் எடுக்கப்படுகின்றன.

எமக்கு ஓர் ஆண்டு காலம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள் எனப்படுகிறது. அப்படி இருக்க ஓர் ஆண்டில் ஆறு நாள்களில் ஆறுகால பூசை என்பதைப் போல நடராசருக்கு அபிசேகம் செய்யப் படுகிறது.

சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தில் கனகசபையில் அபிசேகம் மாலையில் நடைபெறும். ஆனி மாதத்தில் உத்தர நட்சத்திரத்தில் இராசசபை எனப்படும் ஆயிரங்கால் மண்டபத்தில் அபிசேகம் நடைபெறும்.

ஆவணி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனக சபையில் அபிசேகம் மாலையில் நடைபெறும். புரட்டாதி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில் அபிசேகம் மாலையில் நடைபெறும். மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் இராச சபை எனப்படும் ஆயிரங்கால் மண்டபத்தில் அபிசேகம் நடைபெறும். இந்த அபிசேகம் சூரியன் உதயமாவதற்கு முன்னால் நான்கு மணிக்கு நடைபெறும்.

மாசி மாதத்தில் பூர்வபட்ச சதுர்த்தசியில் கனகசபையில் அபிசேகம் மாலையில் நடைபெறும். இந்த ஆறு அபிசேகங்கள் ஆண்டுதோறும் தில்லைக் கூத்தனாக விளங்கும் சிவனுக்கு நடைபெறும். நடராசப் பெருமானுக்கு நிகழ்த்தப்படும் அபிசேக ஆராதனைகளிலும் ஐந்தொழில் தத்துவம் அடங்கியுள்ளது. எம்பெருமானைப் பீடத்திலிருந்து எழுந்தருளச் செய்வது தோற்றம் (சிருட்டி), திருமஞ்சனம் ஆட்டுவது காப்பது (திதி), கறுப்புச் சாந்து அணிவித்தல், மறைத்தல் (தி ரோபவம்), பவனி வருதல் அருளல் (அனுக்கிரகம்) ஆகும்.

இந்த அபிசேகங்களை சைவப்பெருமக்கள் சிவனின் ஆலயங்கள் தோறும் தரிசித்து கொள்வார்கள். அபிசேக நீரானது பரமானந்த உபம் தீர்த்தக் கிணற்றிலிருந்தே எடுத்து பயன்படுத்தப்படுகிறது. இக்கிணறு நடராசர் அருளாட்சி செய்து கொண்டிருக்கும் சிற்சபைக்குக் கிழக்குப் பக்கத்தில் அமைந்துள்ளது.

இந்தத் தீர்த்தத்துக்கு ஐப்பசி மாதம் பூர்வபட்ச நவமி திதியில் கங்கையே வந்து சேர்கிறாள் என்பது ஐதீகம். எனவே இத்தீர்த்தம் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது.

ஆனந்த சொரூபமாகிய சிவகாமியே இந்தத் தீர்த்தமாக இருப்பதாக ஐதீகம். எனவே இத்தீர்த்தம் பரமானந்த கூபம் எனப் பெயர்பெற்று விளங்குகிறது.

அபிஷேகப் பிரியனாக விளங்கும் சிவனுக்கு இஷ்டமான இந்த ஆனித் திருமஞ்சன உத்தரத் திருநாளில் சிவாலயங்களில் நடைபெறும் அபிசேக வைபவத்தில் கலந்து சிவாயநம எனும் திருநாமங்களால் சிவனை பூசித்து வாழ்வு பெறுவோமாக.

## வெளிச்செல்லும் நேரத்தை அதிகரிக்குமாறு போராட்டம்

### பூஸா சிறைக் கைதிகள் முன்னெடுக்கின்றனர்

கொழும்பு, ஜுன் 28

உடற்பயிற்சிக்கு வெளியே செல்லும் நேரத்தை அதிகரிக்குமாறு கோரி பூஸா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் சிலர், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம் 15க்கும் மேற்பட்ட கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் என்று சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் இதுவரை ஒவ்வொரு நாளும் 2 மணித்தியாலங்கள் சிறையிலிருந்து வெளியே வந்து உடற்பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர். இந்தநிலையில், வெளியே செல்லும் நேரத்தை அதிகரிக்குமாறு கோரியே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், ஒருவருக்கொருவர் சந்திக்க முடியாதபடி தங்களை அழைத்துச் செல்வதாகவும் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். ஆனால், இவர்களின் கோரிக்கையை ஏற்க சிறை நிர்வாகம் மறுத்து வருகின்றது. பூஸா சிறைச்சாலையில் கஞ்சிப்பானை இம்ரான் உட்பட பெரும் குற்றவாளிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## 5 ஆம் திகதிக்குப் பின்னர் நெகிழ்வுப் போக்குவரத்து

### அறிமுகப்படுத்துவதாக அரசு அறிவிப்பு

**கொழும்பு, ஜுன் 28**

**அரச நிறுவனங்களில் ஜுலை மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர் நெகிழ்வுப் போக்குவரத்துத் திட்டமொன்றை அறிமுகம் செய்ய அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

நாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் நிறுவ னங்கள் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட சேவையை முன்னெடுத்து வருகின்றன. இந்தநிலையில், ஜுலை மாதம் 5 ஆம் திகதிக்குப் பின்னர், பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், பொதுப் போக்குவரத்தில் பெரும் நெருக்கடி நிலை ஏற்படும் என்பதைக் கருத்திற்கொண்டு, இவ்வாறான நெகிழ்வுப் போக்குவத்துத் திட்டத்தை அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அரச நிறுவனங்களில் பணியாற்றும் சேவையாளர்களின் அலுவலக நேரத்தில் மாற்றம் மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக, போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய, மேற்படி நடை முறையை ஜுலை மாதம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவர அமைச்சு தீர்மானித்துள்ளது. (த)

## தேர்தல் சட்டமீறல்களுக்கு நடவடிக்கை எடுக்கமாட்டீரா?

### ஆணைக்குழுவில் சேனசிங்க முறைப்பாடு

தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் குறிப்பிட்ட ஒரு கட்சியை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் சேறுபூசும் நடவடிக்கைகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச்செயலாளர் சுஜீவ சேனசிங்க தேர்தல்கள் ஆணைக்குழுவில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு செய்துள்ளார். இது பற்றி அவர் தெரிவித்ததாவது:

தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டத்தையும் அரசமைப்பையும் மீறி முன்னெடுக்கப்படும் கட்சி சார்பான அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளோம். இந்த விவகாரம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்படும் குழுவின் ஊடாகவே பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு எதிராகவும் சில வேட்பாளர்களுக்கு எதிராகவும் தொடர்ந்தும் சேறு பூசும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குறித்த ஒரு குழுவினராலோ நபர்களாலோ இவ்வாறாக ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் அளிக்கப்படுகின்றன. இந்த முறைப்பாடுகள் ஊடகங்கள் வாயிலாகப் பகிரங்கப்[illegible]த்தப்படுகின்றன. வேட்பாளர் ஒருவரின் நற்பெயருக்கு [illegible]ங்கம் விளைவிக்கும் வகையில் செயற்படுவதற்கு ஊ[illegible]ம் உட்பட எவருக்கும் உரிமையில்லை. ஆகவே, இது தொ[illegible]ர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கு[illegible]று தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்[illegible]ந்தோம். தேர்தல்கள் ஆணையாளரும் இந்த முறைப்பா[illegible]டை ஏற்றுக்கொண்டார். இது தொடர்பில் எவ்வாறான நட[illegible]க்கைகளை முன்னெடுக்கலாம் என்பது குறித்து அவத[illegible]ம் செலுத்துகின்றோம் என்று அவர் எமக்கு உறுதியளித்[illegible]ந்தார்- என்றார் [illegible])

### கொழும்பு துறைமுகத்தின்

# கிழக்கு முனையத்தை முழுவதுமாக இந்தியாவுக்கு வழங்க நடவடிக்கை!!

## இலங்கை துறைமுக பொதுஊழியர் சங்கத்தினர் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 28**

**கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை பொதுத்தேர்தலின் பின்னர் உறுதியாக இந்தியாவுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது என்று இலங்கை துறைமுக பொது ஊழியர் சங்க'ம் தெரிவித்துள்ளது.**

இதன் காரணமாகவே கொழும்பு துறைமுகத்தின் ஜய கொள்கலன் முனையத்திற்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூன்று புதிய கிரேன்களை அதற்கு பயன்படுத்தாமல், அவற்றைக் கிழக்கு முனையத்துக்கு கொண்டு செல்ல முயற்சித்து வருவதாக சங்கத்தின் பிரதான செயலாளர் சந்திரசிறி மஹகமகே குற்றம் சுமத்தியுள்ளார். அதற்கு எதிராகத் துறைமுக பொது ஊழியர் சங்கம், வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அந்த வழக்கு இந்த மாதம் விசாரணைக்கு எடுக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தமக்கு வழங்குமாறு இந்தியா அழுத்தம் கொடுத்து வருகிறது. இந்த முனையத்தை அபிவிருத்தி செய்ய துறைமுக அதிகாரசபைக்கு 80 மில்லியன் டொலர் மாத்திரமே செலவாகும். எனினும் தரகுப் பணத்துக்கு ஆசைப்பட்ட ஆட்சி யாளர்களால் தேசிய வளங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

---

### பிணைமுறி மோசடி விவகாரம்:

# ரவியைக் கைது செய்வதற்கு பிடியாணை தேவையில்லை

## மேன்முறையீட்டு நீதிமன்றில் சட்டமா அதிபர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 28**

2016ஆம் ஆண்டு இரண்டு மத்திய வங்கி முறிகள் ஏலங்களில் 52 பில்லியனுக்கும் அதிகமான அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மற்றும் ஏனைய சந்தேகநபர்களை பிடியாணை இன்றி கைது செய்ய பொலிஸாருக்கு அதிகாரம் இருந்தது என்று சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தம்மை கைது செய்யுமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ள பிடியாணையை இரத்துச் செய்யுமாறுகோரி ரவி கருணாநாயக்க உள்ளிட்டவர்கள் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மிலிந்த குணதிலக மேற்படி விடயத்தைக் கூறினார். ரவிகருணநாயக்க உள்ளிட்ட சந்தேகநபர்களுக்கு எதிராகப் பொதுச் சொத்துச் சட்டத்தின் பிரிவு 5இன் கீழ் விசாரணை நடத்தி நீதிமன்றில் விடயங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன என பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார். ரவி கருணாநாயக்க மற்றும் பிற சந்தேகநபர்களை இந்தச் சட்டத்தின் கீழ் பிடியாணையின்றி கைது செய்ய பொலிஸாருக்கு அதிகாரம் இருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார். விசாரணையின் அடிப்படையில், ஏலத்திற்கு முன்னர் வங்கிகளின் தலைவர்களுக்கு முறிகள் விற்பனை தொடர்பில் ரவி கருணநாயக்க அறிவுறுத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணநாயக்க மற்றும் பர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் கசுன் பலிசேன ஆகியோருக்கு இடையிலான தொலைபேசி உரையாடல்கள் வெளிவந்துள்ளன எனப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்தில் தெரிவித்தார். மனுக்கள் மீதான மேலதிக விசாரணை இந்த மாதம் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (ம)

---

# சிறைச்சாலையுள் வீசப்பட்ட பொதிக்குள் 'ஐஸ்' போதை!

கொழும்பு, ஜூன் 28

கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலை வளாகத்தின் பின் பகுதியில் இனந்தெரியாத நபரால் வீசப்பட்ட பொதி ஒன்றால் அப்பகுதியில் நேற்றுமுன்தினம் நண்பகல் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது எனச் சிறைச்சாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குண்டு அடங்கிய பொதி போன்று அந்தப் பொதி காணப்பட்டதால் இது தொடர்பில் உடனடியாகப் பொரளைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினர் மற்றும் குண்டு செயலிழப்புப் பிரிவினரும் விரைந்து சென்றனர். வீசப்பட்டிருந்த பொதியைச் சோதனையிட்டதில் பொதியில் கையடக்கத் தொலைபேசி, சார்ஜர், ஐஸ் போதைப்பொருள் என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான பொதி சிறைச்சாலை வளாகத்திற்குள் கைதி ஒருவருக்காக வீசப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொரளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ப)

---

# பாகிஸ்தானில் கல்வி கற்பதற்கு 1,000 பேருக்குப் புலமைப்பரிசில்

கொழும்பு ஜூன் 28

இலங்கை பாகிஸ்தான் உயர்கல்வி கூட்டுறவு திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்கள் ஆயிரம் பேருக்கு 5 வருடத்துக்கான அல்லாமா இக்பால் புலமைப் பரிசில்களை பாகிஸ்தானின் உயர் கல்வி ஆணைக்குழு வழங்கவுள்ளது.

இலங்கை மாணவர்கள் பாகிஸ்தான் சென்று அங்கு பொறியியல், விஞ்ஞானம், அடிப்படை மற்றும் இயற்கை விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்புக்களை மேற்கொள்ள முடியும்.

மாணவர்களுக்கான முழுமையான வகுப்பு கட்டணம், தங்குமிட கொடுப்பனவு, கல்விக் கொடுப்பனவு மற்றும் ஒரு தடவைக்கான திரும்பிவரும் விமானக் கட்டணம் ஆகியவை இந்தப் புலமைப் பரிசிலின் கீழ் உள்ளடங்கும். எந்தவொரு பின்னணியிலுள்ள மாணவர்களும் இந்த புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம் இந்த புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்குமாறு மாணவியர் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவை அலரிமாளிகையில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடிய பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் முகமட் ஷாட் கட்டாக் இந்தப் புலமைப்பரிசில் தொடர்பில் பிரதமருக்கு விளக்கமளித்தார்.

இந்தச் சந்திப்பின் போது பரஸ்பர தகவல் பரிமாற்றத்தின் ஊடாக இலங்கை பாகிஸ்தானுக்கு இடையில் காணப்படும் தீவிரவாதத் தடுப்பு ஒத்துழைப்புக்களை மேலும் வலுவாக்கல் தொடர்பிலும் ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி2)

---

# பங்களாதேஷிலிருந்து 230 பேர் வந்தடைந்தனர்

கொழும்பு, ஜூன் 28

கொரோனா நெருக்கடி காரணமாக பங்களாதேஷில் சிக்கித்தவித்த 230 இலங்கையர்கள் நேற்று நாட்டை வந்தடைந்தனர். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் சிறப்பு விமானம் மூலம் நேற்றுமுன்தினம் மாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த அனைவரும் பி.சி.ஆர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (எ-ரி1)

---

# முதுமை ஏற்பட்டால் அரசியலிலிருந்து நீங்களாகவே ஒதுங்கிக்கொள்ளுங்கள்

## *முன்னாள் எம்.பி வினோ கூறும் ஆலோசனை*

வவுனியா, ஜூன் 28

முதுமை காரணமாக அரசியலிலிருந்து தாங்களாகவே ஒதுங்கிக்கொள்ளவேண்டும். அவர்களாக ஒதுங்கவில்லை என்றால் அவர்களை ஒதுக்க வேண்டிய பொறுப்பு மற்றும் கடமை மக்களிடம் இருக்கின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கூட்டமைப்புக்கான மாற்று அணி நாங்கள் தான் என்று கூறிக் கடந்த பிரதேசசபைத் தேர்தலிலே ஆனந்தசங்கரி ஐயாவுடன் இணைந்து போட்டியிட்டார்கள். எனினும் இப்பகுதியில் நேரடியாக ஓர் உறுப்பினர் கூட வெற்றி பெறவில்லை. இன்று விக்கினேஸ்வரன் ஐயாவின் புதிய கூட்டு வந்திருக்கின்றது. அந்தக் கூட்டும் மாற்றம் தேவை என்று கூறுகின்றது. எல்லோரும் ஐயாக்கள் தான். வயது முதிர்ந்தவர்கள். வீட்டிலே இருந்து ஓய்வு எடுக்கவேண்டியவர்கள். புதிதாக வந்து அரசியல் செய்கின்றார்கள். அவர்களை வீட்டுக்கு நிர்ப்பந்தமாக அனுப்பவேண்டியது உங்களது கடமை. எங்களது சம்பந்தன் ஐயாவும் அரசியல் அரங்கிலே இருந்தாலும் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். முதுமை காரணமாக அரசியலிலிருந்து தாங்களாகவே ஒதுங்கிகொள்ள வேண்டும். அவர்களாக ஒதுங்கவில்லை என்றால் அவர்களை ஒதுக்கவேண்டிய பொறுப்பு மற்றும் கடமை உங்களிடம் இருக்கின்றது. கூட்டமைப்புக்கு தலைமை தாங்குகின்றவர்கள் துடிப்புள்ள அறிவுள்ள வல்லமையும் ஆற்றலும் கொண்டிருக்க வேண்டும். ஆகவே சம்பந்தன் ஐயா நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு கூட்டமைப்புக்கு தலைமைதாங்குகின்ற பொறுப்பை நாங்கள் விடுவிக்கவேண்டும். அவருக்கு ஓய்வுகொடுக்கவேண்டும். நாங்கள் பலமாக இருக்கும்போது அதனைச் செய்வோம்- என்றார். (ப-110)

# கோத்தாபய மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்

## அத்துரலியே ரத்ன தேரர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 28

**கோத்தாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்த பெரும்பான்மையான மக்கள் தற்போது நம்பிக்கை இழந்து வருகின்றனர் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எம்.சி.சி. உட்பட நாட்டுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உடன்படிக்கைகளை நிராகரிப்பதாக கோத்தாபய ராஜபக்ஷ வழங்கிய வாக்குறுதியை நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் நம்பியுள்ளனர். கோத்தாபய ராஜபக்ஷ அரசாங்கம் எம்.சி.சி உடன்படிக்கையைக் கிழித்தெறியும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அரசாங்கம் அந்த உடன்படிக்கையை கைச்சாத்திடும் திசை நோக்கி வழியமைத்து வருகிறது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் முன்னர் அது சம்பந்தமான சில பணிகளை அமெரிக்கத் தூதரகம் ஆரம்பித்துள்ளது.

இதனால், தொடர்ந்தும் பொய்யான வார்த்தைகளைப் பயன்படுத்தாது, தேர்தல் வெற்றிக்கான கோஷமாகப் பயன்படுத்தாது, எம்.சி.சி உடன்படிக்கை கைச்சாத்திடப்படுமா இல்லையா என்பது சம்பந்தமாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரடியாகத் தெரிவிக்க வேண்டும் என்றார். (ப)



## சுவிஸ் தாய் நில பணிமனை மன்னாரில் நேற்றுத் திறப்பு

மன்னார், ஜூன் 28

சுவிஸ் தாய் நிலம் அறக்கட்டளையின் மன்னார் மாவட்டப் பணிமனை நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் வயல் வீதியில் வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

சுவிஸ் தாய் நிலம் அறக்கட்டளையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் அந்தோனிசகாயம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன் போது அறக்கட்டளையின் மன்னார் மாவட்டப் பணிமனை மற்றும் கல்விக்கழகம் ஆகியவை திறந்து வைக்கப்பட்டன.

நிகழ்வில் அறக்கட்டளையின் தலைவர் பவான், யாழ் மாவட்ட இணைப்பாளர் ஆர்.ரமேஸ், மன்னார் மாவட்டச் சட்டத்தரணிகளாக எஸ்.பிரிமூஸ் சிறாய்வா, எஸ்.டினேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். தெரிவு செய்யப்பட்ட 15 மாணவர்களுக்கு இந்த நிகழ்வின்போது பாதணிகள் வழங்கப்பட்டன. 65 பேருக்கு உலர் உணவுப் பொதிகளும், 50 பேருக்கு மூக்குக்கண்ணாடிகளும் வழங்கப்பட்டன. (ப-56)

## தொழிற்கற்கைகளுக்கு விண்ணப்பம் கோரல்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் 2020ஆம் ஆண்டின் இரண்டாம் கல்வியாண்டில் தொழிற்கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

நீரில் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ டிப்ளோமா, வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி, ஆழ்கடல் சுழியோடி, உயிர் பாதுகாப்பு, நீச்சல், கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேற்படி பயிற்சிநெறிகளுக்கு க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் அனுபவமுடையவர்கள் விண்ணப்பிக்க முடியும். மேலும் இக் கற்கை நெறிகளை பூர்த்தி செய்பவர்களுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளும் வகையில் தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும். மேற்படி கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப் படிவங்களை இலங்கை சமுத்திர பல்கலைக் கழக அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

யாழ்ப்பாணம், ஜூன் 28

மானிப்பாய் பெரியதம்பிரான் ஆலயத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் இன்று 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

# ராஜபக்ஷ அரசுடன் இணையமாட்டோம்

## நவீன் திஸாநாயக்க பிடிவாதம்

கொழும்பு, ஜூன் 28

ராஜபக்சாக்களுடன் ரணிலுக்கு 'டீல்' கிடையாது. ராஜபக்சாக்கள் ஆட்சியில் ஒரு போதும் இணையவும் மாட்டோம். சஜித் அணியையும் இணைத்துக் கொண்டு எதிர்காலத்தில் செயற்படுவோம். இவ்வாறு ஐ.தே.கவின் தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொத்மலை பகுதியில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஜனநாயம் இல்லை எனக் கூற முடியாது. பதவிகளுக்கான தேர்வுகள் எல்லாம் ஜனநாயக முறைப்படியே நடைபெற்றுள்ளன.

2015 இல் கட்சி தலைமைப்பதவிக்காக நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் ரணில் வெற்றி பெற்றார். எனது மாமாவான கரு ஜயசூரிய தோல்வியடைந்தார். பிரதித் தலைவருக்கான வாக்கெடுப்பில் சஜித் வெற்றி பெற்றார். எனவே, கட்சிமீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் அர்த்தமற்றவை.

அதேபோன்று தோற்றாலும் மீண்டெழும் சக்தி ஐக்கிய தேசியக்கட்சிக்கு இருக்கின்றது. ஒரு காலகட்டத்தில் 8 ஆசனங்களைக்கூட எமது கட்சி பெற்றுள்ளது. ஆனால், 77 தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றது. 2010 பொதுத்தேர்தலில் படுதோல்வி. 2015 இல் வெற்றிபெறவில்லையா? ஆகவே, ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியமைக்க நாம் போராடுவோம்.

எம்முடன் ஒரே கொள்கையில் இருந்த நண்பர்கள் இன்று பிரிந்து சென்றுள்ளனர். எங்களுக்கு ராஜபக்சாக்களுடன் டீல் இல்லை. எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடன் இணைந்து செயற்பட்டதில்லை. எதிர்காலத்திலும் இணையமாட்டோம். நண்பர்களையும் இணைத்துக் கொண்டு ராஜபக்ஷ முகாமுக்கு எதிராக எதிர்காலத்தில் போராடுவோம். ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியொன்றை அமைப்பதே எமது இலக்காக இருக்க வேண்டும் - என்றார். (க-44)

## மடு ஆலய வளாகப் பகுதியில் யானைகள் பெரும் அட்டகாசம்

### நடவடிக்கை எடுக்க கோருகிறார் அருட்பணி பெப்பி சோசை அடிகளார்

மருத மடு ஆலய வளாகப் பகுதியில் யானைகளின் அட்டகாசத்தால் பொருள்களுக்குச் சேதம் ஏற்பட்டு வருவதுடன் இதை அண்டி வாழும் மக்களுக்கு உயிர் அச்சமும் ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் வன திணைக்களத்தினர் அவசர கவனம் செலுத்த வேண்டும் என மடு ஆலய பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஆடி மாதம் இரண்டாம் திகதி நடைபெற இருக்கும் திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மடு ஆலய மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கடந்த சில காலமாக மடு ஆலயப் பகுதியில் ஒரு யானை அட்டகாசத்தில் ஈடுபட்டு வந்தது. இதனால் அச் சுற்றுச்சூழலில் உயிரிழப்புச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது. மடு ஆலயப் பகுதியில் இந்த யானையின் உட்புகுதலைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்படி திணைக்களத்தினரிடம் பலமுறை வேண்டுகோள் விடுக்கப்பட்டும் அவர்கள் அதில் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. ஆனால் தற்பொழுது ஒரு யானை பிரச்சினையானது இரு யானைகள் பிரச்சினைகளாக உருவெடுத்துள்ளன.

ஆலய வளாகத்துக்குள் இவ்விரு யானைகளும் ஊடுருவி பல சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன. அது மட்டுமல்ல அப்பகுதிக்கு குடிதண்ணீருக்குச் செல்வோருக்கு எந்நேரமும் உயிர் ஆபத்துக்கான அச்சமும் நிலவி வருகின்றது. எனவே வனத் திணைக்கள அதிகாரிகள் இவை தொடர்பில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ப)

# மாலைப்பொழுது ஆகும்போது முடிந்துவிடும் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 28

கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக யாழ்ப்பாண குடாநாட்டில் கோவில்களின் வருடாந்த திருவிழாக்கள், அலங்கார உற்சவங்கள் என்பன நடைபெற்றாலும் மாலைப்பொழுதாகும்வேளை நிறைவுபெற்று விடுகின்றன.

திருவிழாக்கள் கடந்த வருடங்களைப் போன்று இல்லாது இந்தமுறை மிக எளிமையான முறையில் நடத்தப்படுகின்றன. திருவிழாக்களில் அதிக மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்ப்பதோடு மாலை 6.30 மணியுடனும் திருவிழா நிறைவுறுத்தப்பட்டும் வருகின்றது.

கோவில்களில் இந்தமுறை ஒலிபெருக்கி பாவனையும் தவிர்க்கப்பட்டுள்ளது. (து-17)

# உள்ளூர் அரசியலுக்காக சர்வதேசத்தை பகைக்காதீர்

## அரசை வலியுறுத்தியுள்ளது ஐ.தே.க.

கொழும்பு. ஜூன் 28

**தேர்தலை மையப்படுத்தி போலியான தகவல்களை வெளியிட்டு சர்வதேசத்தில் இலங்கை மீதான நம்பிக்கையை சீர்க்குலைத்து விடவேண்டாம் என்றும் உலக நாடுகளுடன் வீண் பகையை வளர்த்துக் கொள்ளாது செயற்படவேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.**

மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்து மீளாய்வுக் குழுவின் அறிவிப்புகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டது. இந்த சந்திப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதன்போது அந்தக் கட்சியினர் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த தேசிய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் மிலேனியம் சவால் ஒப்பந்தம் கைச்சசாத்திடப்பட்டதாகவும், 7.4 மில்லியின் மற்றும் 2.6 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகவும் மீளாய்வுக் குழு குற்றம் சுமத்தியுள்ளது. இதனை முற்றாக நிராகரித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி சுய அரசியல் நலனை மாத்திரம் கருத்தில் கொண்டு செயற்பட்டு வீண் பகையினை அரசாங்கம் தேடிக்கொள்ளக் கூடாது. அமெரிக்காவுடனான உறவு மிக நீண்ட காலமாக ஆரோக்கியமாக பேணப்பட்டு வருகிறது. வெறும் உள்நாட்டு அரசியலுக்காக அந்த உறவைச் சீரழித்து விடக்கூடாது. கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் மிலேனியம் சவால் ஒப்பந்தம் குறித்துப் போலியான தகவல்கள் பரப்பப்பட்டன. கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் அந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்து அறிக்கை வெளியிட்டது. தற்போது அதேபோன்று போலியான தகவல்கள் வழங்கப்படுகின்றன என்றும் இதன்போது ஐ.தே.க. தெரிவித்தது. (ப)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 28

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இந்த வருடத்துக்கான கலாபூஷண விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கலைக்கு விசேட சேவையாற்றி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதிக்குள் 60 வயதைப் பூர்த்திசெய்து நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் கலைஞர்கள் பிரதேச செயலக கலாசார பிரிவில் விருதுக்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து தங்களுடைய கலைசார் விவரங்களுடன் ஜுலை மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது. (ம)

# தோட்ட துரைமார்களின் ஆட்டத்தை அடக்குவேன்

## ஜீவன் தொண்டமான் சூளுரை

கொழும்பு.ஜூன் 28

சில தோட்டங்களில் துரைமார் மீண்டும் ஆட ஆரம்பித்துள்ளனர். எனது பொறுமையைப் பலவீனமாகக் கருதுகின்றனர். தேர்தல் முடிந்ததும் செய்து காட்டுகின்றேன்.

இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் சூளுரைத்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரசாரக்கூட்டமொன்று பொகவந்தலாவயில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சௌமியமூர்த்தி தொண்டமானின் சாணக்கியத்துடனும், ஆறுமுகன் தொண்டமானின் வீரத்துடனும் மக்களுக்குத் தேவையானவற்றை நிச்சயம் செய்து காட்டுவேன். இது சத்தியம். அதிகாரத்தைத் தாருங்கள். ஒரு இளைஞராக எனது சேவையைக் காட்டுகின்றேன்.

குறிப்பாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்க்கு இளம் தலைமைத்துவம் கிடைத்துள்ளது. ஆறுமுகன் தொண்டமான் இருக்கும் போது உங்கள் எல்லோருக்கும் அவர் வழிகாட்டியாக இருந்தார். என்னால் தற்போது வழிகாட்டியாக இருக்க முடியாவிட்டாலும், எதிர்காலத்தில் நிச்சயம் வழிகாட்டுவேன்.

மலையகத்துக்கு எப்படியான தலைமைத்துவம் வேண்டுமோ அதற்கேற்றவகையில் என்னைச் செதுக்குங்கள். அதற்கான உரிமை உங்களுக்கு இருக்கின்றது.

ஆயிரம் ரூபாவை நிச்சயம் பெற்றுக் கொடுப்போம். சம்பளத்தை வைத்து அரசியல் நாடகம் நடத்தவில்லை. மக்களுக்காகவே அரசியல் நடத்துகின்றோம். பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவோம் - என்றார். (க-44)

## வன்னி சுயேச்சைக்குழு வேட்பாளர் ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவு!

வன்னி, ஜூன் 28

வன்னித் தேர்தல் தொகுதியில் சுயேச்சைக் குழுவாக வேட்புமனுத் தாக்கல் செய்த வேட்பாளர் ஒருவர் சுயேச்சைக் குழுவிலிருந்து வெளியேறி ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் திருமதி ரசிக்கா பிரியதர்சனிக்கு தமிழ் மக்கள் இணையத்தின் சார்பில் சுயேச்சைக் குழுவில் வேட்புமனுத்தாக்கல் செய்த வேட்பாளர் வீரசிங்கம் கலைச்செல்வன் தனது ஆதரவை வழங்குவதாக அறிவித்தார், (ம-110)

## மிருசுவில் துர்க்கைக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் கோவில் மகாகும்பாபிஷேக கிரியைகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. எதிர்வரும் புதன் கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும், மறுநாள் வியாழக்கிழமை மகாகும்பாபிஷேகமும் நடைபெறும்.

சுகாதார முறைப்படி முகக்கவசம் அணியாது வருபவர்கள் முதியோர் மற்றும் நோயாளர் ஆகியோர் அங்குவர அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று கோவில் தர்மகர்த்தா அறிவித்துள்ளார். (கு)

## இன்றைய நாள்

**மேடம்:** வியாபாரிகள் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பிள்ளைகளின் வருங்கால நலன் கருதி சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிரிந்து சென்ற நண்பர்கள் உங்களைத் தேடி சேருவார்கள்.

**இடபம்:** குடும்பத்தில் உள்ள பெரியோர் ஒருவரின் மூலம் உங்களின் மனக்குழப்பத்திற்கு தீர்வு கிடைக்கும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பணியாளர்கள் தன்னம்பிக்கையோடு செயல்படுவர்.

**மிதுனம்:** புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளால் எதிர்பாராத வருமானம் உண்டு. வியாபாரிகள் லாபத்திற்காக அதிகம் உழைக்க வேண்டிவரும். குடும்பத்தின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** குடும்பத்தினர் உங்களிடம் அன்புடன் நடந்து கொள்வார்கள். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல தகவல் கிடைக்கும். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான மகிழ்ச்சியான சூழல் உருவாகும்.

**சிம்மம்:** பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும். பணியாளர்கள் எதிர்பார்த்ததை விட அதிகப் பலன் பெறுவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத 'ஓடர்'களை பெறுவீர்கள்.

**கன்னி:** வியாபாரத்தில் நினைத்ததை முடித்து நிம்மதி காண்பீர்கள். கணவருக்கு நண்பர்கள் மூலம் நல்ல தகவல் ஒன்று வந்து சேரும். பெண்களின் மனக்குழப்பங்கள் அகலும். குடும்ப ஒற்றுமை பலப்படும்.

**துலாம்:** வெளிநாட்டில் இருக்கும் உறவினர்கள் மூலம் நல்ல செய்தி வரும். பொதுநல சேவைகளில் ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் மேன்மையும், உயர்வும் உண்டு.

**விருச்சிகம்:** மனதில் தோன்றும் விரோத உணர்வுகளை தவிர்ப்பது நல்லது. அலுவலகத்தில் மற்றவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பதால் சிக்கல் ஏற்படக்கூடும். கடன்சுமை குறைய புதிய வழிபிறக்கும்.

**தனுசு:** வருமானம் திருப்திகரமாக இருக்கும். திட்டமிட்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபத்தை பெறுவதற்கு கூடுதலாக உழைக்க வேண்டிவரும்.

**மகரம்:** கடந்த சில நாட்களாக இருந்து வந்த மன உளைச்சல் நீங்கும். எதிர்பாராத வரவால் குடும்பத்தேவை பூர்த்தியாகும். பொதுவாழ்வில் பாராட்டும், புகழும் கூடும். வியாபாரிகளுடைய கனவு நிறைவேறும்.

**கும்பம்:** பெண்களுக்கு கவலை தரும் சம்பவங்கள் நடக்கக்கூடும். கணவருக்கு எதிர்காலம் பற்றிய பயம் உருவாகும். விவாதங்களை தவிர்த்தால் மன உளைச்சலை தடுக்கலாம். நிலுவைப் பணம் எளிய முயற்சியால் கிடைக்கும்.

**மீனம்:** நீண்ட நாளாக தடைப்பட்டு வந்த செயல்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உருவாகும். நண்பர்கள் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவுவர். வரவு போதுமானதாக இருக்கும்.

## முகக்...

முகக் கவசங்கள் அணியாதவர்கள் தொடர்பில் ஆராய


### உதவி அர்ச்சகர் தேவை

வவுனியா நகர வெளிவட்ட வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்திற்கு நிரந்தர உதவி அர்ச்சகர் தேவைப்படுகின்றார்.
பின்வரும் தகைமையுடையவர் எதிர்பார்க்கப்படுகின்றார்.
01. பரம்பரை பிராமணராக இருக்கவேண்டும்.
02. தங்கியிருந்து பூசைகள் செய்யக்கூடியவராக இருக்க வேண்டும் (வதிவிட வசதிகள் உள்ளது.)
03. பாகசாலை வேலைகள் தெரிந்தவராக இருக்கவேண்டும். 04 முன்பு பணியாற்றிய ஆலயங்களிலிருந்து அனுபவக்கடிதம் தேவை.
சம்பள விவரங்கள் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
பரிபாலன சபை
ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம் வெளிவட்ட வீதி, வவுனியா.
தொலைபேசி இலக்கம் 024 222 1406
தொடர்பு கொள்ளக்கூடிய நேரம் காலை 6.00 - 9.30 மாலை 5.00 - 6.30


### மரண அறிவித்தல்



தோற்றம் 31.10.1942 — மறைவு 27.06.2020

**சபாபதி அருமைத்துரை**

சோதியர் வளவு கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி அருமைத்துரை நேற்று (27.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சந்தணத்தின் அன்புக் கணவரும், அருளானந்தசோதி (நுபாலதிபர் வல்வெட்டித்துறை, அகில இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பிரதிப் பொதுச் செயலாளர்), செ.விஜயலட்சுமி (கனடா), அ.அன்பழகன் (முகாமைத்துவ உதவியாளர், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம்), அ.அருட்செல்வம் (கனடா), ஆகியோரின் பாசமிகு தந்தையும், அ.ஜீவராணி, பொ.செல்வராசா, காலஞ்சென்ற அ.அமுதா, மற்றும் அ.சர்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.06.2020) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அல்வாய் பங்கு வேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ.அருளானந்த சோதி (மகன்)
077 6365758

### மரண அறிவித்தல்



**தற்பரானந்தம் இரத்தினம்**

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் முருகண்டியை வசிப்பிடமாகவும் தற்போது அம்பாள் வீதி, நாயன்மார் கட்டை வதிவிடமாகவும் கொண்ட தற்பரானந்தம் இரத்தினம் நேற்று (27.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-எள்ளுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தற்பரானந்தத்தின் அன்பு மனைவியும், தவகுமார் (சிவானந்தா கபே-முருகண்டி), தவச்செல்வி (ஆசிரியை-ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்-அரியாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபகரனின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பாக்கியம், இராசரத்தினம், கனகரத்தினம், பவளராணி மற்றும் சரஸ்வதி, தங்கரத்தினம், நாகபூசணி ஆகியோரின் அன்பு சகோதரியும், பிருத்தியனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2020) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/4, முதலாம் ஒழுங்கை,
அம்பாள் வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல்:
மகன்-தவக்குமார்
மருமகன்-சுபகரன்
076 7011 431

இன்றுமுதல்சிறப்புநடவடிக்கைகள்முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அரசால் வழங்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாது பெரும்பாலானவர்கள் செயற்படுவதாகவும் அவர் கூறினார். இதனால் இன்று முதல் முகக் கவசங்களை அணியாதவர்கள் 14 நாள்களுக்கு சுயதனிமைப்படுத்தப்படுவார்கள் என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.க)

## ஆவா...

நேற்று மாலை இணுவிலில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து வழங்கப்பட்ட உத்தரவுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் மீது தற்போது எந்தக் குற்றச்சாட்டுக்களுக்கும் இல்லாத நிலையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டுச் சம்பவங்கள், கொள்ளைகள் அதிகரித்துள்ள பின்னணியில் இந்தக் கைதுக்கான உத்தரவு கொழும்பிலிருந்து வழங்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட நபர் நேற்று முன்னிரவு வரையில் சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவில்லை. (ஒ.5,26)

## அடித்தால்...

கருத்துமாக உள்ளோம். ஆனால் மற்றவர்கள் செய்யும் கபடமான, பிழையான விமர்சனங்களுக்குப் பதில் அளித்தே தீரவேண்டும் என்ற கருத்தும் கொண்டவர்கள் நாங்கள். அடித்தால் அடிப்போம். நாங்களாக அடிக்க மாட்டோம். இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் அங்குரார்ப்பணக் கூட்டம் வட்டுக்கோட்டை தொல்புரம், மோகன் அரங்கில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தக் கூட்டத்தில் தமது கூட்டணிக்கு ஏன் வாக்களிக்க வேண்டும், தமது கூட்டணியின் தனிச் சிறப்புகள் என்ன என்பது பற்றியும் குறிப்பிட்டார்.

கொள்கை அடிப்படையிலானது தமது கூட்டணி என்றும், புதியவர்களும் அனுபவமுள்ளவர்களும் தமது கட்சி சார்பில் வேட்பாளர்களாகக்களமிறங்கியுள்ளனர்என்றும் குறிப்பிட்டார். வெளிப்படைத் தன்மையாகச் செயற்படுவது தமது கூட்டணியின் சிறப்பியல்பு என்றும் தெரிவித்தார்.

மேலும், வட,கிழக்கு இணைப்பும் அங்கு சமஷ்டி ஆட்சி கொண்டு வர வேண்டும் என்பதுமே எமது குறிக்கோள். அதை அடைவதற்கு நாங்கள் செய்யவிருக்கும் நடவடிக்கை ஐக்கிய நாடுகள், வல்லரசுகள், புலம்பெயர் உறவுகள் ஆகியோரின் ஆதரவு பெற்று வடக்கு கிழக்கில் மக்கள் தீர்ப்பைப் பெற வைப்பது. எமது தமிழ் மக்கள் தமது தாயகத்தில் தமக்கு சமஷ்டி வேண்டும் என்று கூறினால் அதனை நடைமுறைப்படுத்த உலக நாடுகள் முன்வரவேண்டும். அதற்கான பிரயத்தனங்களில் ஈடுபடுவோம். இவ்வாறான மக்கள் தீர்ப்பு பல நாடுகளில் எடுக்கப்பட்டு அரசியல் பிரச்சினைகள் முன்னர் தீர்க்கப்பட்டுள்ளன என்பதை மனதில் வைத்து நாம் எமது தன்னாட்சிக்கான நடவடிக்கைகளில் இறங்க இருக்கின்றோம்.

அடுத்து எமது மக்களின் மனோநிலையை மாற்ற இருக்கின்றோம். அரச உத்தியோகம், அரச உத்தியோகம் என்று எமது இளைஞர்கள் அலைவதை நாம் நிறுத்த வேண்டும். எவ்வளவு சிறிய வேலையென்றாலும் அரச வேலையொன்று இருந்தால்தான் அவ்வாறான இளைஞர்களை நாம் எமது மகள்மாரைத் திருமணம் செய்ய விடுவோம் என்ற பெற்றோரின் சிந்தனைகளை மாற்ற எத்தனிப்போம். ஓய்வூதியத்திற்காகத்தான் பெற்றோர்கள் அரசாங்க உத்தியோக மாப்பிள்ளைகளைத் தேடுகின்றார்கள் என்றால் தற்பொழுது காப்புறுதி நிறுவனங்கள் ஒருவர் ஓய்வு பெற்று மரணிக்கும் வரையில் ஓய்வூதியம் பெற நடவடிக்கைகள் எடுத்துள்ளன, என்று விக்னேஸ்வரன் குறிப்பிட்டார். (ஒ.5)

## தொடரும்...

மத்துக்கான அனைத்து வீதிகளிலும் பயணிப்பவர்கள் மறிக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

மூளாய், வல்வெட்டித்துறையிலும் கடந்த வாரங்களில் இராணுவத்தினரால் இவ்வாறான சுற்றி வளைப்புச் சோதனைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,20)

## ஆனையிறவு...

தெரிவித்துள்ளார் கருணா அம்மான்.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஆனையிறவுச் சண்டையை வழிநடத்தியது பானு. அவர்தான் கொடியேற்றினார். எனது பங்கு வேறு. ஆனால் நான் பழைய விடயங்களை பேச விரும்பவில்லை. ஆனையிறவு சமரில் நான் இருக்கவில்லை என்று வரும் விமர்சனங்கள் பற்றி நான் பேச விரும்பவில்லை. ஒஸ்லோவில் சமஷ்டி அடிப்படையிலான தீர்வு திட்டத்தை பாலா அண்ணையிடம் சொல்லி நானே கைச்சாத்திட வைத்தேன். இது நல்ல விடயம் பாலா அண்ணை கையெழுத்து வையுங்கள் என்றேன். அதுதான் எனக்கும், தலைவர் பிரபாகரனுக்குமான பிரச்சனை. அவர் சமஷ்டி தீர்வை விரும்பவில்லை. நாங்கள் இலங்கைக்கு திரும்ப முன்னரே அந்த விடயத்தை பிழையாக தலைவரிடம் மற்றவர்கள் சொல்லி விட்டனர். நான் ஒப்பந்தத்தை தலைவரிடம் கொண்டு சென்றபோது, அவர் அதை விரும்பவில்லை. அவர் கடுமையாக நடந்து கொண்டார், என்றார். (ஒ.5)

## எனக்கு...

தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஜி.ரி.லிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

குளிர்பானப் போத்தல்களில் ஜி.ரி.லிங்கநாதனுக்கு வாக்குக் கோரி ஒட்டப்பட்டுள்ள ஸ்ரிக்கர்களின் ஒளிப்படங்கள் சமூக மற்றும் இணைய ஊடகங்களில் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

'இவ்வாறான கீழ்த்தரமான அரசியல் செய்ய வேண்டிய தேவை எனக்கில்லை. எனது செல்வாக்கை மழுங்கடிக்க வவுனியா வடக்கில் இவ்வாறான விசமத்தனமான பரப்புரை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இவ்வாறான செயற்பாடுகளைச் செய்யும் விசமிகளை மக்கள் நன்கு அறிவார்கள்' என்று அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.5,[illegible])

## முகக் கவசம்...

யில் வவுனியா பொலிஸார் நேற்று ஈடுபட்டனர்.

எம்மை பாதுகாக்க தலைக்கவசம் அணிவது எவ்வாறு கட்டாயம் ஆக்கப்பட்டதோ அதே போன்று எம்மையும் மற்றவர்களையும் கொவிட் 19 வைரஸ் தாக்கத்திலிருந்து பாதுகாப்பதற்கு முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் முகக்கவசம் அணியாது வீதிகளில் செல்பவர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஒ.5,[illegible])

## வாடகைக்கு

**10 பரப்புக்காணி களஞ்சிய தேவைகளுக்கு**

பயன்படக்கூடிய வீட்டுடன் வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் மற்றும் தொழில் தாபனங்களுக்கு விரும்பத்தக்கது
கல்வியங்காடு சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில்
நாயன்மார்கட்டு நோக்கி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ளது

**077 913 6201, 071 926 3452**

(ஏ.ஏ 15043) (13)

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு
$O^+$ இரத்தவகையைச் சேர்ந்தவரின் சிறுநீரகம்
தேவைப்படுகின்றது.
45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

**077 630 7106, 077 613 2904**

(ஏ.ஏ 15043) (13)

## மரண அறிவித்தல்



### இராசரெத்தினம் விஜயா (செல்லாஅக்கா)

நாலுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட இராசரெத்தினம் விஜயா (செல்லாஅக்கா) கடந்த (26.06.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னம்பலம் இராசரெத்தினத்தின் (வேலணை) பாசமிகு மனைவியும், பகீதரனின் (பொலிஸ் உத்தியோகத்தர்) அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2020) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுல் தகனக்கிரியைக்காக மதியம் 12 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நாலுகால் மடம்,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 934 2935**

## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA** Study, Work & Settle
- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

**Hotline: 0777-761 346**

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

STUDENT VISA
VISIT VISA
TOURIST VISA

USA / UK
Australia
New Zealand
Italy / France
Swiss
Germany
Romania
Norway
Finland
Poland

FLEX Graphic

10 வருட கால நம்பிக்கையான சேவை

## ஆண்டுகள் ஏழு ஆனதுவோ!

அமரர்

### கனகசபை இராசநாயகம்



வாடிநிதம் வாழலாமோ!
வனப்பிழந்த மனைதனில்
தேடியுனைத் தவிக்கின்றோம்!
தேவைகளை நிறைவாக்கி
கோடிசுகம் தந்தவனே!
கோடியாய் குவிந்தென்ன!
நாடிநீயும் வந்திடாயோ!
நம் கவலைகள் தீர்த்திடாயோ!

**சகிலாலயம், மனோகரா,**
**அல்வாய்.**

**குடும்பத்தினர்.**

## விற்பனைக்கு

பிறவுண் றோட் கல்வாரி சேர்ச்
அருகில் உள்ள லேனில் 5பரப்புக்
காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **076 168 0059**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வண்ணார்
பண்ணை கங்காதரன் வைத்திய
சாலைக்கு முன்பாக (100 M
தொலைவில்) 1 1/4 பரப்பு
(ஒன்றேகால்) காணி விற்பனைக்கு
உள்ளது. கிணற்றுடன்
சுற்றுமதில்கொண்டது. இரண்டு
பக்க பாதை அமைக்க முடியும்.
விலை பேசித்தீர்மானிக்கலாம்.
இடைத்தரகர்கள் தேவையில்லை.
ஆர்வமுள்ளவர்கள் நேரடியாக
தொடர்பு கொள்ளவும்.

தொ.இல:- **077 074 3130**

ES
Printers



மக் பிரிண்ட்
(MUG)

# 357, Kasthuriyar Road, Jaffna.
021 492 7471 / 021 492 7472

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 14 | | 27 |
| 10 | | 06 |
| 1952 | | 2020 |



### Lion செல்லப்பா சுந்தரேஸ்வரன்

பழை வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட Lion செல்லப்பா சுந்தரேஸ்வரன் (தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவன்) நேற்று (27.06.2020) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சபாறட்ணம் (மானிப்பாய் விதானையார்)-மகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், ஹேமலதாவின் (ஓய்வுபெற்ற கணக்கு எழுதுநர்-இ.போ.ச) அன்புக் கணவரும், வஜிதன், நிஷாந்தி (இலங்கை வங்கி-கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரசங்கரின் மாமனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தனலட்சுமி, புவனேஸ்வரி, மகேஸ்வரன், ராஜேஸ்வரன் மற்றும் மகேஸ்வரி (நோர்வே), காந்திமதி (டென்மார்க்) ஆகியோரின் சகோதரரும், உஷேனி (குவைத்), துளசி (ஜேர்மனி), சுமதி (லண்டன்), ஸ்ரீசங்கர் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ரவீந்திரன் (குவைத்), விக்கினராஜா (ஜேர்மனி), கனேந்திரன் (லண்டன்), சொரூபா (லண்டன்) ஆகியோரின் சகலனும், பத்மாவதியின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.06.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26, சென்.ஆன்ஸ் சேர்ச் லேன்,**
**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 2648 732**
**077 944 7977**

## மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 29 | | 27 |
| 10 | | 06 |
| 1931 | | 2020 |



### திருமதி சிவசிதம்பரம் வைத்திலிங்கம்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசிதம்பரம் வைத்திலிங்கம் நேற்று (27.06.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியர் கந்தையா வைத்திலிங்கத்தின் மனைவியும், காலஞ்சென்ற ஸ்ரீகாந்தன், ஞானலிங்கம், செல்வராணி மற்றும் தியாகலிங்கம், வரதலிங்கம் கணேசலிங்கம் செல்வமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற புவனேந்திரராணி மற்றும் யோகநாதன், ஜீவரஞ்சிதம், புவனேஸ்வரி, றூபினி, யுவனி ஜெயக்குமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், இந்துசா, ஜெயந்த ரூபன், தேனுசன், நிருஜன், பிரசாந் அனஸ்ரிக்கா, ஜெயசாந், சரண்யன், கீர்த்திகன், கம்சாயினி, சரணபவன், தாரணி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், அக்சனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2020) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : -**
**மகன்-வரதலிங்கம்**
**077 087 1638**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 02 . 02 . 1930



உதிர்வு 29 . 05 . 2020

## அமரர் சின்னத்தம்பி சிதம்பரம்

கடந்த (29.05.2020) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (28.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவுள்ள மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

எமது துயரில் கலந்து கொண்டு தொலைபேசி ஊடாகவும், நேரில் வந்தும் ஆறுதல் கூறியவர்களுக்கும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## வாடகைக்கு விடப்படும்

யாழ். நகரில் அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 320 1599, 077 8400 938

## வேலைவாய்ப்பு Vacancy

பிரபலமான நிறுவனத்திற்கு அலுவலக உதவியாளர் (Office Assistant) பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 25-35. சம்பளம் 25,000/=. கல்வித் தகைமை: க.பொ.த (சா/தரம்)

தொடர்புகளுக்கு:- 077 939 3867

## விற்பனைக்கு

மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, யம்பு, பசன்புறூட், ரகன் புறூட், தென்னங்கன்று, செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலை வேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிறல், றெட்பாம், கேவி, மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

கிளை:
K.K.S. வீதி,
இணுவில்

## O/L மாணவர்களுக்கான கணித வகுப்புகள்

- Zoom Meeting ID 6746060803
- Pass Word kis=2020
- 35 வருட கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியர்
- மாதத்தின் அனைத்து நாள்களும் அதிகாலை 4.30 - 6.30 வரை
- தமிழ்மொழிமூலம்
- ஆங்கில மொழிமூல மாணவர்களுக்காக ஆங்கில சொற்கள் பயன்படுத்தப்படும்.

மேலதிக தகவல்களுக்கு:
076 170 2851

## தேவை

கொப்பறா தேங்காய்
மொத்தமாகவும் சில்லைறையாகவும் கொள்வனவு செய்யப்படும்
077 772 2215

## காணி வீடு குத்தகைக்கு

பளை (A9 வீதி) குடத்தனை, பருத்தித்துறை ஆகிய இடங்களில் காணி குத்தகைக்கு உண்டு. யாழ்ப்பாணம் அரசடி வீதியில் வீடு குத்தகைக்கு உண்டு .

077 843 5397

## உதவியாளர் தேவை

கொழும்பில் வசிக்கும் வயோதிப பெண்ணிற்கு தங்கி இருந்து சமையல், உதவி செய்ய குடும்ப பொறுப்புக்களற்ற 25-45 வயதிற்குட்பட்ட பெண் உதவியாளர் தேவை.

077 2530 865

## மணமகள் தேவை

1980, கேட்டை 4 ஆம் பாதம், லக்கினத்தில் செவ்வாயுள்ள வைத்தியருக்கு மணமகள் தேவை.

077 2987 506

## PERSONAL ENGLISH CLASSES
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்

அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப் படும்.

யாழ்ப்பாணம்.

T.P: 077 658 9443

## IPS இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

எமது நிறுவனத்தில் கல்வி கற்கும் (பிரிவு-25) மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர் வரும் 05.07.2020 இலிருந்து ஆரம்பமாகின்றன. புதிய பிரிவுகளும் குறித்த திகதியில் ஆரம்பமாகின்றன. நிர்வாகம்.

T.P: 076 685 2529

## மரண அறிவித்தல்

தோற்றம் 19 . 07 . 1936



மறைவு 26 . 06 . 2020

## முருகுப்பிள்ளை குமாரவேலு

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் சிவபுரம் வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை குமாரவேலு 26.06.2020 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற இராமசாமி - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், அழகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமசாமி, குணரத்தினம், சரஸ்வதி, அமிர்தலிங்கம், இரத்தினபூபதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசேஸ்வரி, தர்மராசா, காலஞ்சென்ற செல்வத்துரை, ஞானேஸ்வரி, சிவபாதம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.06.2020) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சிவபுரம் இந்து மயானத் துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J. 12344) (13.17)

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 07 . 1928



இறப்பு 20 . 06 . 2020

## திருவாளர் பொன்னையா கிருஷ்ணபிள்ளை

(மேனாள் உரிமையாளர் -
"மகேசன் கபே" செல்வச்சந்நிதி தொண்டமானாறு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில், கனடா Toronto, Montreal ஐ வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் பொன்னையா கிருஷ்ணபிள்ளை அவர்கள் 20.06.2020 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தியாகர் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், விசாலாட்சியின் அருமைக் கணவரும், காலஞ்சென்ற தயாபரம்பிள்ளையின் அன்புச் சகோதரனும் யோகம்மாவின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்றவர்களாகிய கந்தையா, இராசம்மா, காங்கேசு, சாமிநாதன், அருணாசலம், வாலாம்பிகை, மீனாட்சி மற்றும் Dr. திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மைத்துனரும், கௌரியாம்பாள், காலஞ்சென்றவர்களாகிய ராஜேஸ்வரி, அமுதகௌரி மற்றும் சுரேஷ்குமார், சிவகுமார் ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும், மகேஸ்வரன், தெய்வகலா, நாகேஸ்வரன், ஸ்ரீதரன், ரவீந்திரன், கிருஷ்ணலதா, ஜெகசிற்பியன், பேராசிரியர் விசாகரூபன், அங்கயற்கண்ணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், நந்தகுமாரி, ஜெகதீஸ்வரன், மலர்விழி, கோகிலா, யாழினி, நீரைஞ்சிதராஜா, நந்தினி, Dr.மைதிலி ஆகியோரின் அன்பு மாமனும், கிருஷ்ணரூபன், அபிராமி, அபிநயா, சிவலக்ஷன், இளமாறன், Dr. துவாரகன், சேந்தன், உமையாள், லக்ஷிமி, சரவணன், மாதங்கி, நின்னுஜா - நஸ்ருடீன், ஹனுஜா, பைரவி, Dr.தினேஷ்ராஜ், வெங்கடேஷ்ராஜ், சரண்யா, குணால், சண்முகன் ஆகியாரின் அன்புப் பேரனும், ஆகில், இஷான், அயனா ஆகியோரின் அன்புப் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 05.07.2020 ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.00 மணியளவில் இல.4275, boul, des sources, Dollard -des - ormeaux, QC CA, H9B 2A6, Canada நாட்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

| | | | |
|---|---|---|---|
| மகேஸ்வரன் | - 417 988 78956 | ரவீந்திரன் | - 514 358 2452 |
| தெய்வகலா | - 9477 5414 340 | கிருஷ்ணலதா | - 514 684 1338 |
| நாகேஸ்வரன் | - 6477 022 822 | ஜெகசிற்பியன் | - 49 172 277 3746 |
| ஸ்ரீதரன் | - +61 040 837 7065 | விசாகரூபன் | - 94 76 452 5250 |

(J. 12344) (13.17)

# வேலைவாய்ப்பு

அரச மற்றும் தனியார் ஒப்பந்த வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் எமது நிறுவனத்திற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவை.

- **இடம்** : கிளிநொச்சி / அறிவியல்நகர்
- **தகைமை** : NCT (Civil or QS) அல்லது ஏற்றுக்கொள்ளக்கூடிய தொழில்நுட்ப கல்வித்தகைமை
- **அனுபவம்** : 3 வருடங்கள் (நிர்மாணத்துறை)
- **சம்பளம்** : வினைத்திறனிற்கு ஏற்றவாறு பேசித்தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு: தங்களது CV இனை அனுப்பவேண்டியது
enterprisejathur@gmail.com
அல்லது
Viber No.: 076 824 5457

நிர்வாக உத்தியோகத்தர்
Jathur Enterprise (Pvt) ltd
Shanth Pharmacy block
1st Floor Kodikamam.

## வடமாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு வாடகை கட்டடத்தை பெறுவதற்கான கோரிக்கை

பின்வரும் வசதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் வாடகைக்குக் கட்டடத்தினை வழங்க விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1. வதி விட அளவு குறைந்தது 4,000 சதுர அடிகளைக் கொண்டதாகவும் அண்ணளவாக 6 அறைகளுடன் பெரியளவிலான விறாந்தையைக் கொண்டதாகவும் ஆகக் குறைந்தது மூன்று வாகனதரிப்பிட வசதி கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
2. பிரதானமாக A9 வீதிக்கு அண்மித்ததாகவும் (கைதடிச் சந்தியிலிருந்து மாகாண சபைக்கு அண்மை வரையும். கச்சேரி யாழ்நகரை அண்மித்தும்) வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டத்திலுமிருந்தும் பொதுமக்கள் சென்று வரக் கூடியவாறும் இருப்பது விரும்பத்தக்கது.
3. முற்பணம் வழங்கப்படமாட்டாது.
4. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் அடிப்படையில் மாத வாடகை வழங்கப்படும்.

மேலதிக நிபந்தனை மற்றும் விண்ணப்பப்படிவங்களை இல.59, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தில் பெற்று 16.07.2020 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் நேரடியாகவோ பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொ.குகநாதன்
மாகாணக் காணி ஆணையாளர்,
வடக்கு மாகாணம்

(cr. 34556) (13.17)

## மரண அறிவித்தல்



தோற்றம் 17 . 07 . 1951
மறைவு 27 . 06 . 2020

### கந்தசாமி செல்வகுலசிங்கம்

(ஓய்வுநிலை பொதுச் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்)

நாகர்கோயிலைப் பிறப்பிடமாகவும் புற்றளை புலோலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செல்வகுலசிங்கம் நேற்று (27.06.2020) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், வாகீசன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.06.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
077 965 7088

(cs.1145) (13.17)

## நாகபூஷணி திருமண சேவை
### மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த குற்றமற்ற, சூரி/செவ் உள்ள 15 கிரக பாவமுடைய 1994 இல் பிறந்த டாக்ரர் மணப்பெண்ணுக்கு BSc இக்கு மேல் கல்வி கற்ற மணமகன் தேவை.

257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
021 222 9306, 077 138 7596

## பணியாளர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் சுப்பர் மார்கட் ஒன்றிற்கு**
பின்வரும் பணியாளர்கள் தேவை
**01. காசாளர் - பெண்**
**02. விற்பனை உதவியாளர் - பெண்**
(யாழ்நகரை அண்மித்தவர் விரும்பத்தக்கது)
தொடர்பு: 021 492 7080, 077 623 1295, 077 477 3480
29.06.2020 - 04.07.2020 வரைநேரில் சமுகமளிக்கவும்

**அன்னை நாகாபூட்சிற்றி**
இல.175, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்

(cs.32625) (13.17)

## இயந்திரத் தொகுதி விற்பனைக்கு

வவுனியாவில் தற்போது பாவனையிலுள்ள கல் உடைக்கும் இயந்திரத் தொகுதி (கிறடர் 250 X 400) அனைத்துப் பாகங்களும் உடன் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்

**077 077 7422**

## 6 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 26 . 09 . 1948
மறைவு 05 . 07 . 2014

### இராசையா நவரத்தினராசா

திதி: அட்டமி

*கண்ணுட் கருமணி போல்*
*எமைக் காத்த அப்பாவே!*
*நாட்கள் பல ஓடி மறைந்தாலும்*
*நீங்கள் எம் நெஞ்சிற் பதித்த நினைவுகள்*
*எம் உயிருள்ளவரை நீங்காது*
*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

யாழ். வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய், பிரான்ஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்ட

### மனோன்மணி நவீனச்சந்திரன் (சரஸ்)

(ஓய்வு பெற்ற மருத்துவ ஆய்வுகூடப் பொறுப்பாளர் - கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய்)



பிறப்பு 03.10.1941
இறப்பு 28.06.2000

நேற்றுப் போல இருக்கின்றதே.
உனை நாம் இழந்து
அம்மா ! இருபதா ஆண்டுகள்?
இறையே எம் கருக்கூடே..
தொடர்ந்து நாம் வாழ்வது,
கருஞ்சுழிக்காலங்களா?
அம்மா
சாய்ந்திட நாம், உன் தோள்கள் எங்கே?
கொஞ்சிட பேத்திகள், உன் கன்னங்கள் எங்கே?
கூத்தாட பேரன்கள், உன் மடி எங்கே?
கூடப்பிறந்தவர்கள் மயங்கிய உன் அன்பு எங்கே?
சொந்தங்கள் தடவிய உன் நாடி எங்கே?
உற்றார் ஆறிடும் உன் மனை எங்கே?
உறவினர் உருகிய உன் பாசம் எங்கே?
நண்பர்கள் நெகிழ்ந்திடும் உன் சிரிப்பு எங்கே?
மருமக்கள் கேட்டிடும் உன் அறிவுரை எங்கே?
பெறாமக்கள் பாராட்டும் உன் கரிசனை எங்கே?
மாற்றாரும் மதித்திடும் உன் பண்பு எங்கே?
எம் தோழர்களும் போற்றிடும் உன் அரவணைப்பு எங்கே?
அணுவாய், ஆற்றலாய், நிதம் கொஞ்சும் எம் குஞ்சுகளாய்!
வருவாய்கணம், எம்முள் வந்து போகும் சுவாசமாய்!
தமிழாய், நிதமாய் நீங்கமறவீசும் வளியாய்! வாழ்வாய் எம்முள்!
மறுபடிப்படியாய் உன் மடி பிறக்க தருவாய் வரம் என்றும் அருளி
அருளி!

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்**

## வாடகைத்தாய் தேவை

30 வயதிற்கு குறைவான பெண் ஒருவர் IVF ஊசி மூலம் குழந்தையை பிரசவிக்க வாடகைத் தாயாகத் தேவை. இரகசியம் பேணப்படும்.

**077 637 5294**

## கடை வாடகைக்கு

மந்திகை பிரதான வீதியில் கடை வாடகைக்கு விடப்படும்.

**077 670 9034**

## வீடு வாடகைக்கு

நல்லூர் செட்டி தெருவில் 3 அறைகள் கொண்ட வீடு 300,000 /= முற்பணமும். 20,000 /= வாடகைக்குண்டு.

**076 850 8411**

## அடகு நகை மீட்பு

நீங்கள் அடகு வைத்த நகைகளை மீட்க முடியாமல் விட்டால் மீட்டு அதற்கான பெறுமதி பணம் தரப்படும்.

**077 615 1283**

## விற்பனைக்கு

Japan இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புத்தம்புதிய PCX125 Motor Bick (2019) விற்பனைக்கு உள்ளது.

**076 767 7320, 076 607 7320**

## மாபிள் வேலை

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுரடி 45 ரூபா

**077 334 1281**

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகில் பிளெச்சர் வீதியில் 2¾ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**077 724 9824**

## பணிப்பெண் தேவை

வவுனியாவில் வயோதிபபெண் ஒரு வரை தங்கியிருந்து பராமரிப்பதற்கு 35 - 45 வயதிற்குட்பட்ட பணிப் பெண் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 778 2052**

## காணி விற்பனைக்கு

இராச வீதியில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 676 4380, 075 203 4139**

## தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல **ஹாட்வெயர் கடைக்கு கணக்காளர் பெண்** (வயது 18 - 25) ஒருவர் தேவை.

**077 446 6429**

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலுக்கு அருகில் 4பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

**077 6778359/ 077 4167634**

## மணமகள் தேவை

யாழ் இந்து 1976 மகம் - 1 சூரியன் செவ்வாய், பட்டதாரி அரச தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை

**077 902 0669**

## காணி விற்பனைக்கு கடை வாடகைக்குண்டு

திருநெல்வேலிச் சந்தி அருகில் 3 பரப்புக்காணி. சத்திரத்து சந்திக்கும் (யூனியன் லேன்) அருகில் 1 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. மற்றும் யாழ்ப்பாணம் நவீன சந்தை மேல்மாடியில் 2 கடைகள் வாடகைக்குண்டு.

**077 361 1282**

## சகல வாகனப் பாகங்களும் உங்களின் வாசலுக்கு விநியோகம்

தேவையான சகல வாகனப் பாகங்களையும் அலைச்சலின்றி பஞ்சிகாவத்தையிலிருந்து சகாய விலையில் உங்களின் வதிவிடத்துக்கு வரவழைக்க நாடவேண்டிய இடம்.

Jayani Traders
249B-3/2 Willy's Building
Panchikawatte Road, Colombo-10

தமிழ் - 076 5478450
சிங்களம் / ஆங்கிலம் : 0777566576
011 234 7473

# வேலியே பயிரை மேய்ந்த கதை

கொழும்பு, ஜூன் 28

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்த போதைப்பொருள் தடுப்பு பிரிவைச் சேர்ந்த 4 அதிகாரிகள் உள்ளிட்ட 5 பேர், குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் தடுப்பு பிரிவைச் சேர்ந்த 4 பேர், ஒரு பொதுமகன் கைதாகியுள்ளார்.

இவர்கள், போதைப்பொருள் விநியோகம் மற்றும் கைதான பிரபல போதைப்பொருள் கடத்தல்காரர்கள் தப்பிக்க உதவியது உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

அவர்கள் எப்படி போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு உதவினார்கள் என்பது குறித்து கடந்த சில தினங்களாக சிங்கள ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர், அவர்களிடம் தொடர்ந்து வாக்குமூலம் பெற்று வந்த நிலையில், தற்போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடனான தொடர்பின் மூலம் அவர்கள் 31 கோடி ரூபாவுக்கும் அதிக பணத்தை ஈட்டியிருந்தது விசாரணையில் தெரிய வந்துள்ளது. நிலம், கார், மோட்டார் சைக்கிள்கள், பணம் ஆகியவற்றை அவர்கள் பெற்றுள்ளனர்.

பிலியந்தலையில் சில வருடங்களின் முன்னர் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு அதிகாரி கொல்லப்பட்டிருந்தார். இந்த சம்பவத்திற்கும் கைதானவர்களிற்கும் ஏதாவது தொடர்புள்ளதா என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (ஒ.5)

## வடக்கில்...

'தமிழ் அரசியல்வாதிகளின் வலியுறுத்தலுக்கமைய நாம் செயற்படமாட்டோம். பாதுகாப்பு அமைச்சரான - முப்படைகளின் தளபதியான ஜனாதிபதியின் பணிப்புரைக்கமையவே நாம் செயற்படுகின்றோம்' எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு நாட்டின் பாதுகாப்புதான் முக்கியம். எந்தெந்த மாகாணங்களில் எவ்வளவு படையினர் இருக்க வேண்டுமோ அதே எண்ணிக்கையிலான படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் முப்படையினரின் பாதுகாப்பு மிகவும் அவசியம். இம்மாகாணத்தில் கடல் வழியாகப் போதைப்பொருள்கள் பெருமளவில் கடத்தப்பட்டு வருகின்றன. அதேவேளை, இம்மாகாணத்தில் வாள்வெட்டுக் குழுக்கள் என சட்டவிரோதக் குழுக்களின் அடாவடிகள் தலைவிரித்தாடுகின்றன. இப்படியான குற்றச் செயல்களைப் பொலிஸாரின் உதவியுடன் படையினர் தடுத்து வருவதுடன் குற்றவாளிகளையும் தப்பவிடாமல் கைதுசெய்து வருகின்றனர்.

இந்தநிலையில், வடக்கிலுள்ள படை முகாம்களை அகற்றவும் முடியாது, குறைக்கவும் முடியாது. இராணுவத்தினரை வெளியேற்றவும் முடியாது, குறைக்கவும் முடியாது.

சிவில் நிர்வாக சேவையின் உயர் பதவிகளில் படை அதிகாரிகளை ஜனாதிபதி நியமித்துள்ளதை தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட எதிரணியினர் கண்டபடி விமர்சிக்கின்றனர். ஜனாதிபதி நாட்டின் பாதுகாப்பே முக்கியம் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றார். அதனால்தான் அவர் பாதுகாப்புத்துறையில் திறமையானவர்களை சிவில் நிர்வாகத்தில் உயர்நிலைப் பதவிகளில் நியமித்துள்ளார். இதுதான் உண்மை.

நாட்டின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டே செயலணிகளை ஜனாதிபதி நிறுவி வருகின்றார். இதில் படை அதிகாரிகளையும் நியமித்தால் இதை இராணுவ ஆட்சி என்று சொல்வது எந்தவகையில் நியாயம்?' எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ஒ.5,22)

## வாக்குச்...

டதாகவும், கம்பஹா மாவட்டத்துக்கான வாக்குச் சீட்டுக்கள் மட்டுமே இன்னும் அச்சிட வேண்டியிருப்பதாகவும், அரச அச்சக திணைக்களத்தின் தலைவர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்துக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணி இன்று (நேற்று) மேற்கொள்ளப்படுவதாகவும், நாளையுடன் (இன்று) அந்தப் பணிகளும் முடிந்துவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்டி மற்றும் திருகோணமலை மாவட்டங்களுக்கான வாக்குச் சீட்டுகள், தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் நாளை (இன்று) ஒப்படைக்கப்படும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஒ.5)

## ஓர்...

தெரிவித்தார்.

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 20 ஆசனங்களைக் கைப்பற்றும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன், திருகோணமலையி லுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். சம்பந்தனின் இந்தக் கருத்தைக் கிண்டலடித்துள்ள தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள், கூட்டமைப்பின் தலைமையையும் சாடி வருகின்றனர். இதற்குப் பதில் வழங்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் மாற்று அணிகள் என்ற பெயரில் களமிறங்கியுள்ள தமிழ்க் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் ஓர் ஆசனம் கூடப் பெறுவது சந்தேகமே. அப்படிப்பட்டவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையோ அல்லது அதன் தலைமையையோ விமர்சிப்பதற்கு அருகதையற்றவர்கள்.

இவர்களுக்குத் தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை இருந்திருந்தால் ஓர் அணியாகத் தேர்தலில் களமிறங்கியிருக்கலாம். ஆனால், இவர்களோ பிரிந்து, பிரிந்து நின்று போட்டியிடுகின்றார்கள். தமிழ் மக்களின் வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கில்தான் இவர்கள் இவ்வாறு பிரிந்து நிற்கின்றார்கள். தேர்தலில் இவர்களுக்குத் தமிழ் மக்கள் தங்கள் வாக்குகளால் பதிலடியைக் கொடுப்பார்கள்.

போலித் தமிழ்த் தேசியம் பேசித் திரிபவர்கள்தான் இந்த மாற்று அணியினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விமர்சிப்பது மட்டும்தான் இவர்களின் வேலை - என்றார். (ஒ.5,22)

## துணைவேந்தர்...

பெறவிருப்பதாக அறியவருகிறது.

துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருப்பவர்களில் இருந்து திறமை அடிப்படையில் - மதிப்பீட்டின் படி முதல் மூன்று இடங்களைப் பெறுகின்றவர்களின் பெயர்களை ஜனாதிபதியின் தெரிவுக்காகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பரிந்துரைப்பதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேரவையின் கூட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் 7ஆம் திகதி கூட்டப்படவுள்ளது.

துணைவேந்தர் தெரிவுக்காகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய நடைமுறைகள் அடங்கிய சுற்றறிக்கையின் படி கோரப்பட்டதற்கமைய 5 பேர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்துள்ள னர். ஐந்து பேரது தகுதி, தராதரங்களை மதிப்பீடு செய்து திறமை ஒழுங்கைத் தீர்மானிப்பதற்காக, விண்ணப்பதாரிகளின் விவரங்கள் மதிப்பீட்டுக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

விண்ணப்பங்களை மதிப்பீடு செய்வதற்கென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட, மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தலைமையிலான மூவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூதவையின் பரிந்துரைப்படி பேரவையால் நியமிக்கப்பட்ட இருவருமாக 5 பேர் கொண்ட மதிப்பீட்டுக்குழுவே துணைவேந்தர் விண்ணப்பதாரிகளின் தகுதி, தராதரங்களை மதிப்பிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்தக் குழுவின் உறுப்பினர்களால் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு வழங்கப்படும் அறிக்கை எதிர்வரும் ஓகஸ்ட் 7 ஆம் திகதி இடம்பெறும் பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் அதே நேரத்தில், பேரவை உறுப்பினர்களும் தனித்தனியாக விண்ணப்பதாரிகளை மதிப்பிட்டுப் புள்ளிகளை வழங்குவர். மதிப்பீட்டுக்குழு, பேரவை ஆகியவற்றின் மதிப்பீடுகளின் படி திறமை, முன்னுரிமை அடிப்படையில் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்படுவர். அங்கிருந்து பரிந்துரைகளுடன் உயர் கல்வி அமைச்சின் ஊடாக மூன்று பேரில் இருந்து ஒருவரை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக ஜனாதிபதி தெரிவு செய்வார். (ஒ.5)

## வடக்கில்...

தான். இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை தேர்தலின்போது தாம் ஆட்சிக்கு வந்தால் வடக்கில் இருக்கும் இராணுவத்தினரை வெளியேற்றுவோம் என்று முழக்கம் இட்டனர். ஆனால் ஒரு இராணுவ சிப்பாயை கூட வெளியேற்ற முடியவில்லை. இவர்கள் அதைத்தான் செய்யவில்லை என்று பார்த்தால் வடக்கு மாகாண சபைக்கு கிடைத்த பெருமளவான அபிவிருத்தி நிதியை அந்தத் திட்டத்துக்கு தனது உறவினரை நியமிக்கவில்லை என்பதற்காக நிதியை திருப்பி அனுப்பிய அரசியல்வாதி தான் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

மாகாண சபையை ஆட்சி செய்தபோது மக்களுக்கு எதனையும் செய்யாத இவர் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக இந்தியப் பிரதமர் மோடி வந்த போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றி எவையும் பேசாது இந்தியாவில் பல பெண்களை சாமியார் என்ற போர்வையில் கற்பழிப்பு செய்ததாக குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த பிரேமானந்தா என்ற சாமியாரின் சீடர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

வடக்கு மக்களுக்கு பல ஆண்டுகளாக எவ்வளவோ பிரச்சினைகள் இருக்க கற்பழிப்பு சாமியாருடன் இருந்தவர்களை விடுவிக்க வலியுறுத்தி மோடிக்கு கடிதம் கொடுத்தார். இதுதான் மாகாண சபையில் ஆட்சியில் இருக்கும் போது ஆற்றிய பணி. வடக்கு மாகாண சபையில் ஐந்து வருடங்களை வீணடித்து விட்டு இப்போது மீண்டும் ஐந்து வருடங்களை வீணடிக்கவா தமிழ் மக்களிடம் வாக்கு கேட்கின்றார்? - என்றார். (ஒ.எ.20)

## பொலிஸார்...

தெரிவித்து முல்லைத்தீவு தேர்தல்கள் திணைக்களத்தில் முறைப்பாடு மேற்கொண்டுள்ளார்.

ஒரு வாரத்துக்கு முன்னர் பொலிஸ் பொறுப்பதிகாரி தன்னைத் தாக்கி மிரட்டியதாக அந்த முறைப்பாட்டில் வேட்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து அறிக்கை சமர்பிக்குமாறு தேர்தலுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் தேர்தல்கள் திணைக்களம் கோரியுள்ளது. (ஒ.5)

## பொய்யுரைக்கும்...

சேனாதிராசா சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். அதேவேளை, எந்தக் காலத்திலும் கண்டிராத ஓர் இராணுவ ஆட்சி நாட்டில் ஏற்படப் போகின்றது எனவும், இது குறித்து நாம் அனைவரும் விழிப்புடன் இருக்கவேண்டும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் உரையாற்றிருந்தார். இது தொடர்பில் மஹிந்த அணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில ஆகியோர் கூட்டாகப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்கள்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸாரினதும் விசேட அதிரடிப் படையினரினதும் பாதுகாப்புடன் வடக்கில் சுற்றித் திரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாதுகாப்புத்துறைக்கு எதிராகப் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகின்றனர். வடக்கு, கிழக்கில் 20 ஆயிரம் உளவாளிகளைக் களமிறக்க வேண்டிய தேவை ஜனாதிபதிக்குக் கிடையாது. இது மாபெரும் பொய்க்குற்றச்சாட்டு.

அதேவேளை, இந்த நாட்டில் இராணுவ ஆட்சியை முன்னெடுக்கும் நோக்கம் ஜனாதிபதிக்கு அறவே கிடையாது. இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சியுடன் மூவின மக்களையும் நல்லிணக்கத்துடன் வாழ வைப்பதே ஜனாதிபதியின் விருப்பம்.

பொதுத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைச் சுருட்டுவதற்காகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதி மீதும் அரசு மீதும் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொய்யான செய்திகளைத் தெரிவித்து வருகின்றனர். அவர்கள் உடன் திருந்தாவிடின் அவர்கள் அனைவரையும் கைதுசெய்து சிறையில் அடைப்பதே சிறந்தது. குழப்பவாதிகளுக்கு முடிவு கட்டினால்தான் நாட்டில் நல்லிணக்கம் ஏற்படும் - என்றார். (ஒ.5,22)





# பட்டினிச்சாவை எதிர்கொண்டிருக்கும் லட்சக்கணக்கான யேமன் குழந்தைகள்!

## ‘யுனிசெப்’ பெரும் கவலை

கொழும்பு, ஜூன் 28

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக லட்சக்கணக்கான ஏமன் குழந்தைகள் பட்டினிச் சாவை எதிர்கொண்டுள்ளனர் என்று குழந்தைகள் நல அமைப்பான யுனிசெவ் தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:


ஏமனில் 20 லட்சம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இந்த எண்ணிக்கை இந்த வருட இறுதியில் 40 வீதமாக அதிகரிக்கவாய்ப்புள்ளது. கொரோனா காலத்தில் நிதித் தட்டுப்பாடு நிலவுவதால் ஏமனில் போரால் பாதிக்கப்பட்டுள்ள லட்சக்கணக்கான குழந்தைகள் பட்டினிக்குத் தள்ளப்படலாம். ஏமனில் உள்ள சுகாதார அமைப்புகள் கொரோனா வைரஸைச் சமாளிக்கப் போராடிவரும் சூழலில் அங்கு குழந்தைகளின் நிலைமை மிக மோசமடைந்துள்ளது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமன் நாட்டில், சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவூதி அரேபியா செயல்படுகிறது. ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது.

மேலும், ஐக்கிய அமீரக ஆதரவு ஏமன் தென்பகுதி பிரிவினைவாதிகள், ஏமன் அரசுக்கு எதிராகச் சண்டையிட்டு வந்தனர். ஏமனில் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் போர் காரணமாக ஆயிரக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. ஏமன் போரில் இதுவரை ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். (ம)

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்பை வீழ்த்துவார் ஜோ பிடென்!

### கருத்துக் கணிப்பில் தகவல்




வொஷிங்டன், ஜூன் 28

அமெரிக்க அதிபர் தேர்தல் இன்னும் சில வாரங்களில் இடம்பெறவுள்ள நிலையில், தற்போதைய அதிபரும் குடியரசுக் கட்சியின் வேட்பாளருமான ட்ரம்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரான ஜோ பிடென் வெற்றிபெறுவார் என்று கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

அரிசோனா, புளோரிடா, மிச்சிகன், வடக்கு கரோலினா, பென்சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் ஆகிய மாகாணங்களில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பிலேயே இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை போதிய அளவில் முன்னெடுக்காமை, மெக்சிக்கோ எல்லையில் தடுப்புச்சுவர் அமைத்தமை, கறுப்பினத்தவரான ஜோர்ஜ் புளொய்ட் படுகொலை, வடகொரியாவுடனான பேச்சுக்களை தோல்வியில் முடித்துக்கொண்டமை உள்ளிட்ட காரணங்களுக்காக ட்ரம்புக்கு எதிராகக் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)




அமெரிக்காவில் ஜோர்ஜ் புளொய்ட் என்ற கறுப்பினத்தவர் அமெரிக்கப் பொலிஸாரால் படுகொலை செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அங்கு நிறவெறிக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுமார் ஒரு மாதகாலமாகியும் இந்தப் போராட்டங்கள் அங்கு தொடர்ந்து நடந்து வருகின்றன. (ம)

## கொரோனா இரண்டாம் அலையால் உலக நாடுகளுக்கு பெரும் ஆபத்து!

### ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் எச்சரிக்கை

லண்டன், ஜூன் 28

கொரோனாப் பெருந்தொற்றால் சுமார் ஒருகோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 5 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா இரண்டாவது அலையால் பெரும் ஆபத்து உள்ளது என்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக உலகில் சுமார் 200க்கும் மேற்பட்ட நாடுகளில் ஊரடங்கு உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. தற்போது கொரோனாத் தொற்று குறைந்து வருவதை அடுத்து பல்வேறு நாடுகளும் ஊரடங்கு உத்தரவைத் திரும்பப்பெற்று வருகின்றன. ஊரடங்கைத் திரும்பப்பெறும் நடைமுறையால்தான் கொரோனா இரண்டாவது அலை வீசக்கூடும் என்று ஒக்ஸ்போர்ட் தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஈரான், ஜேர்மனி, சுவிற்ஸர்லாந்து, உக்ரைன், பங்களாதேஷ், பிரான்ஸ், சுவீடன், இந்தோனேசியா, அமெரிக்கா, சவூதி அரேபியா ஆகிய நாடுகள்தான் கொரோனா இரண்டாவது அலையால் அதிகம் பாதிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## தனிமைப்படுத்தலில் தளர்வுகள்

### பிரிட்டன் அறிவிப்பு

லண்டன், ஜூன் 28

வெளிநாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு வரும் பயணிகள் 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுவரும் நிலையில், அதில் சில தளர்வுகளைக் கொண்டுவர பிரிட்டன் அரசு பரிசீலித்து வருகிறது.

ஜூன் 8ஆம் திகதி முதல் வெளிநாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு வரும் வெளிநாட்டுப் பயணிகளும், பிரிட்டன் குடிமக்களும் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்தத் தனிமைப்படுத்துதல் கட்டுப்பாட்டால் பிரிட்டனுக்கு வருவது பலருக்கும் தயக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்தே இந்த தனிமைப்படுத்தலில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதை அந்த நாட்டின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அறிவித்தார். (ம)



## ஒரே இரவில் கோடீஸ்வரராகினார் ஏழைத் தொழிலாளி

டொடோமா, ஜூன் 28

தன்சானியாவில் ஓர் ஏழைத் தொழிலாளி ஒரே இரவில் இலங்கை மதிப்பில் சுமார் 100 கோடி ரூபாவுக்கு சொந்தக்காரர் ஆகியுள்ளார்.

சுரங்கத் தொழிலாளியான அவர் டான்சனைட் எனப்படும் இரு இரத்தினக் கற்களை கண்டுடெடுத்துள்ளார். சுமார் 14 கிலோ உடையனவாக அந்த இரத்தினக் கற்கள் இருந்தன. அவற்றை தன்சானிய அரசிடம் ஒப்படைத்தார். அவருக்கு தன்சானிய அரசு இலங்கை மதிப்பில் சுமார் 100 கோடி ரூபாவை வழங்கியுள்ளது. (ம)

# கரீபியன் லீக்கில் கெய்ல் விலகல்!



ட்ரினிடாட், ஜுன் 28
இந்த வருடத்துக்கான கரீபியன் லீக்கில் இருந்து விலகுவதாக அறிவித்தார் அந்த நாட்டின் அதிரடி வீரரான கிறிஸ் கெய்ல்.
கடந்த சில ஆண்டுகளாக கெய்ல் ஜமைக்கா அணிக்காக விளையாடி வந்தார். இந்த வருடம் ஜமைக்கா அணி அவரை வெளியேற்றியது. சென். லூட்ஸ் அணி அவரை வாங்கியது. இதையடுத்து கெய்லுக்கும் ஜமைக்கா அணிக்கும் இடையில் பெரும் கருத்துமோதல் ஏற்பட்டது. ஜமைக்கா அணியின் தலைமைப் பயிற்சியாளர் சர்வான் மற்றும் நிர்வாகத்தினரை அவர் கண்டபடி விமர்சித்தார். இந்தப் புகைச்சல் தொடர்ந்து வந்த நிலையில் அவர் இந்த வருட கரீபியன் பிறீமியர் லீக்கில் இருந்து விலகினார். (ம)

# பயிற்சிக்குத் திரும்பினார் இங்கிலாந்து வீரர் ஆச்சர்

லண்டன், ஜுன் 28
இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜோப்ரா ஆச்சர் மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் எதிர்வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகின்றது. இந்தத் தொடருக்காக இரு அணிகளின் வீரர்களும் சுய தனிமைப்படுத்தலை முடிவு செய்து தற்போது பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் ஆச்சரின் உறவினர் ஒருவருடைய உடல் நிலை மோசமாக இருந்ததால் ஆச்சர் கூடுதல் காலம் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். தனிமைப்படுத்தலை முடிவுசெய்து நேற்றுமுன்தினம் அவர் பயிற்சிக்குத் திரும்பினார். (ம)



# 30ஆண்டுகளின் பின் லிவர்பூல் சம்பியன்!

லண்டன், ஜுன் 28
30 ஆண்டுகளின் பின்னர் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் கிண்ணம் வென்றது லிவர்பூல் கால்பந்தாட்டக் கழகம்.
ஐரோப்பியக் கண்டத்தில் நடைபெறும் முக்கிய கால்பந்து 'லீக்' போட்டிகளில் ஒன்று பிரிமீயர் லீக் போட்டியாகும். இங்கிலாந்தில் நடைபெறும் பிரிமீயர் லீக் தொடர் கொரோனாத் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டிருந்தது. ரசிகர்கள் இல்லாமல் கடந்த 17ஆம் திகதி இந்தத் தொடர் மீண்டும் ஆரம்பித்தது. நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் செல்சி அணி 2:1 என்ற கோல் கணக்கில் நடப்பு சம்பியனான மன்செஸ்டர் சிட்டியை வீழ்த்தியதை அடுத்து லிவர்பூல் அணி கிண்ணம் வென்றது.
லிவர்பூல் அணி 31 ஆட்டங்களில் விளையாடி 28 வெற்றி, 2 சமநிலை, ஒரு தோல்வியுடன் 86 புள்ளிகள் பெற்று முதல் இடத்தில் இருக்கிறது. 7 ஆட்டங்கள் இன்னும் எஞ்சி இருக்கும் நிலையில் அந்த அணி கிண்ணம் வெல்வதை உறுதிப்படுத்தியுள்ளது. மன்செஸ்டர் சிட்டி 31 ஆட்டங்களில் 20 வெற்றி, 3 சமநிலை, 8 தோல்வியுடன் 63 புள்ளிகள் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளது. (ம)



# நொவக் ஜோகோவிக்கின் பயிற்சியாளருக்கு தொற்று

ரென்னிஸ் உலகின் முடிசூடா மன்னனான நொவக் ஜோகோவிக்கிக்குக் கொரோனாத் தொற்று இருந்தமை ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவரின் மனைவிக்கும் பயிற்சியாளருக்கும் தொற்று இருப்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
ரென்னிஸ் உலகில் பெடரர், நடால் ஆகியோருக்கு அடுத்தபடியாக அதிக கிராண்ட்ஸ்லாம் கிண்ணங்களை வென்றுள்ளார் ஜோகோவிக். கடந்த மூன்று வருடங்களாக பெடரர், நடால் ஆகியோரை விடவும் சிறப்பாகச் செயற்பட்டு தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளார். அதிக கிராண்ட்ஸ்லாம் வென்ற வீரர் என்ற பெருமையை எனதாக்குவேன் என்று கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் அவர் சபதம் மேற்கொண்டிருந்தார். தனது அடைவுகளுக்கு தன் பயிற்சியாளர் இவானிசெவிச் முக்கிய காரணம் என்று அவர் புகழாரம் சூட்டியிருந்தார். அவர்கள் இருவரும் கொரோனாத் தொற்றால் தற்போது பாதிக்கப்பட்டுள்ளமை ரசிகர்களை கவலையடையச் செய்துள்ளது. (ம)


## மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 12 . 1929



இறப்பு
19 . 05 . 2020

### திருமதி அகில் துரைசாமி

(அகில் ஆசிரியர், Ahil - Teacher)

(இளைப்பாறிய ஆசிரியர், உரும்பிராய் இந்து கல்லூரி, வசாவிளான் மத்திய கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஹட்டன் கன்னியர்மடம் மற்றும் பழைய மாணவர் உரும்பிராய் இந்து கல்லூரி, யாழ் பரியோவான் கல்லூரி, மஹரகம பயிற்சி கல்லூரி)

மலேசியா பினாங்கைப் பிறப்பிடமாகவும், யாழ். உரும்பிராய், லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட அகில் துரைசாமி கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ரட்ணநாயகம் - தையல்முத்து தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான துரைசாமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களாள ஜெயவீரசிங்கம், சுகிர்தம் ரட்ணநாயகம் (கொழும்பு மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரியும், காலஞ்சென்ற கிறிஸ்டியன் டேவிட் துரைசாமி (இலங்கை மின்சார சபை) அவர்களின் அன்பு மனைவியும், போல் சத்தியநேசன் (முன்னாள் உதவி முதல்வர்), சாமுவேல் காருண்யநேசன், அன்ரு திவ்வியநேசன் டானியல் ஜெபநேசன் ஆகியோரின் பாசமிகு தாயும், இந்துமதி நேசன், பிரமளா அன்ரு, யெனி டனி ஆகியோரின் அன்பு மாமியும், நயோமி, ஜோஷ்வா, ஜோன், ஜெரமி ஜென்சன் ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை பரிசுத்த கப்பிரியல் ஆலயம் வொன்ஸ்டட் (குடும்பத்தினர் மட்டும்). அன்னாரின் நல்லடக்கம் லண்டன் மனோபார்க் சேமக் காலையில் 06.07.2020 முற்பகல் 11.15 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் பழைய மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.T.S. லேன் உரும்பிராய் தெற்கு,
077 467 8506

தகவல் :
அருந்தவராணி (தவம்)

# ஜனாதிபதி கோத்தாவால் நாடு சிங்கப்பூராகுமாம்!

கொழும்பு, ஜூன் 28
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இந்த நாட்டை சிங்கப்பூர் போன்று மாற்றியமைக்க உறுதி பூண்டுள்ளார் என பொது மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட வேட்பாளர் ஏ.எல்.எம்.பாரிஸ் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சலுகைகளையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்ள ஒவ்வொரு முஸ்லிம் பெண்களும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கரங்களைப் பலப்படுத்த முன்வர வேண்டும். இந்த நாட்டில் எந்தவொரு வருமானம் குறைந்த குடும்பங்களும் இருக்கக் கூடாது என்பதே ஜனாதிபதியின் பிரதான நோக்கமாகும்- என்றார். (ம)

# சித்தங்கேணி கொள்ளை:
# சந்தேகநபர் கைதாகி பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 28
வட்டுக்கோட்டை சித்தங்கேணியில் வீடு புகுந்து வயோதிபப் பெண்களை தாக்கி நகை மற்றும் பணத்தைக் கொள்ளையடித்த சந்தேகத்தில் அந்தப் பகுதியில் வசிக்கும் ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மோப்ப நாயின் உதவியுடனே சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதி சித்தங்கேணியில் உள்ள வீட்டில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கொள்ளையர்கள் இருவர் வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

வயோதிப் பெண்கள் இருவரையும் மிரட்டியதுடன் ஒருவரை வீட்டு வளாகத்துக்குள் உள்ள கோவிலில் போய் அமருமாறு கூறியுள்ளனர். அதன்பின்னர் மற்றைய வயோதிபப் பெண் கூக்குரலிட்டதால் அவரது வாயை துணியால் கட்டிவிட்டு வீட்டை சல்லடை போட்டு தேடுதலை மேற்கொண்டனர்.

அலுமாரியிலிருந்த பணம் மற்றும் நகைகளை கொள்ளையிட்டுவிட்டு வேறு நகைகள் இருந்தால் தரும்படி வாயைக் கட்டிய வயோதிபப் பெண்ணைத் தாக்கி கொள்ளையர்கள் கேட்டுள்ளனர்.

கொள்ளையர்களுக்குப் பயந்து போத்தல்களில் போட்டு வைத்த நகைகளையும் அந்தப் பெண் எடுத்துக் கொடுத்துள்ளார். கொள்ளையடித்த பொருள்களை கொண்டு அங்கிருந்து கொள்ளையர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு மேப்ப நாயுடன் சென்ற தடவியல் பொலிஸார் ஆராய்வுகளை மேற்கொண்டனர். கொள்ளையர்களால் உடைக்கப்பட்ட ஒரு இடத்திலிருந்து மோப்ப நாய் பின்தொடர்ந்து சென்று அயலிலுள்ள ஒருவரின் வீட்டின் முன்னால் நின்றது. அவரையே வயோதிப் பெண்களும் சந்தேக நபராகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியிருந்தமையால், குறித்த நபரைச் சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்தனர்.

அவர் நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.
(ஒ.5,26)

**விற்பனைக்கு**
தரமான மணல். சல்லி. கண்ட கற்கள் என்பவற்றை எம்மிடம் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P: 076 5735740

**GROUP & PERSONAL CLASSES**
A/L - Physics
O/L - Science
தொடர்பு:-076 116 3918

**காணி தேவை**
யாழ். பல்கலைக்கழகத்துக்கு அண்மித்து இரண்டு பரப்பு விஸ்தீரணத்துக்கு குறையாத வெற்றுக் காணி அல்லது வீட்டுடன் காணி தேவை. உடன் பணம் செலுத்தி கொள்வனவு செய்யப்படும்.
(கொக்குவில் கிழக்கு, திருநெல்வேலி விரும்பத்தக்கது)
076 047 1123

**AIRCON SERVICE**
சகல விதமான குளிரூட்டி சாதனங்களும் (A/C), Fridge) C.C.T.V, House Wiring உத்தரவாதத்துடன் பொருத்தியும் திருத்தம் செய்து தரப்படும்
Sinnappa Veethy
Navaly East, Manipay.
077 767 5200

**உணவகம் வாடகைக்கு**
யாழ்.கச்சேரிக்கு அருகாமையில் உணவகத்திற்கு தேவையான அனைத்து தளபாடங்கள். பாத்திரங்கள் மற்றும் குளிரூட்டிகளுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
077 459 8083, 077 790 6054

**சிறுநீரகம் தேவை**
2 சிறுநீரகங்களும் பாதிக்கப்பட்ட மிகவும் வறுமை நிலையிலுள்ள 40 வயது ஆண் நோயாளி ஒருவருக்கு O⁻ குருதிப் பிரிவை சேர்ந்த சிறுநீரகம் உடனடியாக தேவை.
தானமளிக்க விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு: 077 163 2822
077 669 7657

**வகுப்புக்கள்**
A/L இரசாயனவியல், பௌதிகவியல் அலகு ரீதியான மீட்டலுடன். கடந்த கால வினாக்களும் செய்து விடப்படும்.
076 686 7099, 077 074 7906

**GROUP CLASSES**
O/L
English Literature
Brown Road, Jaffna.
076 616 4886

**தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்கு ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது நாள் கூலி அடிப்படையிலோ கட்டடவேலை செய்யக்கூடிய மேசன் கூலியாள்கள் தேவை
077 985 1946, 077 592 5371

**விற்பனைக்கு**
40 நாள்கள் நிரம்பிய Doberman Puppies (Male and Female) விற்பனைக்குண்டு.
077 931 7178

**மணமகள் தேவை**
யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 இல் பிறந்த அவிட்ட நட்டசத்திரம் உடைய (பார்வை அற்றவர்) மணமகனுக்கு மணமகள் தேவை.
021 205 3081

**தேவை**
கொழும்பில் வசிக்கும் மருந்துவரின் வீட்டிலுள்ள 8 மாத இரு குழந்தைகளை பராமரிப்பதற்கு அனுபவமுள்ள பெண்தேவை.
வெளிநாட்டில் குழந்தைகளை பராமரித்த அனுபவ முள்ளவரிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
சம்பளம் பேசிதீர்மானிக்கலாம்.
077 3620 988

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
வெளி நாடுகளுக்கான பொதிகள் கடிதங்கள் சேவை DHL மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
திருமுருகன் கொம் நெற் (Pvt)Ltd
321, K.K.S. Road, Jaffna
கிளைகள்:நெல்லியடி, திருநெல்வேலி, கொழும்பு. 0777 554 528

Jaffna College Institute of Technology
Calls for the following courses
i) Civil Draftsperson (NVQ level 4) course – *1 year*
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
Course leads to:
*Follow courses in level 5
* Register for drawings at local councils
ii) Desktop Publishing ( *3 months part-time*)
Includes : Corel Draw , PageMaker & PhotoShop
Commencement in July 2020
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382/0772022537
Email: ejcit@sltnet.lk.

**பாராளுமன்றத் தேர்தல் - 2020**
**யாழ்.மாவட்டம்**
**ஐக்கிய மக்கள் சக்தி**
மக்களின் வேண்டுகோளுக்கு
இணங்க,
காலத்தின் தேவை கருதி,
சமூக சேவையை
மேம்படுத்த,
கௌரவ
சஜித் பிரேமதாச
அவர்களுடன்
வெற்றியை நோக்கி....





அ. கிருபாகரன்
கிருபா லேணர்ஸ்
2 X

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
A/L - 2020 & DAY CLASS
மீண்டும் ஆரம்பம்: 29.06.2020
திங்கள் காலை 7.00 மணி
A/L - 2021 - 2022
04.07.2020 சனிக்கிழமை முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.
ENGLISH MEDIUM வகுப்புக்கள் வழமைபோல் நடைபெறும்.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.